# කම්කරු අමාත්‍යාංශය
# தொழில் அமைச்சு
# Ministry of Labour

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# ஆண்டு செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report
# 2025

## II කොටස -දෙමළ භාෂාව
## பகுதி II – தமிழ் மொழி
## Section II – Tamil Language

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2025

# தொழில் அமைச்சு

## உள்ளடக்கம்

**அத்தியாயம் ஒன்று** **பக்க எண்**


1 தொழில் அமைச்சு ........ 1
1.1 அறிமுகம் ........ 1
1.2 நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள் ........ 1
1.3 அமைச்சின் முக்கிய செயற்பாடுகள் ........ 1
1.4 அமைச்சின் கீழுள்ள பிரிவுகள் ........ 2
1.4.1 நிர்வாகப் பிரிவு ........ 2
1.4.2 அபிவிருத்தி பிரிவு ........ 2
1.4.3 திட்டமிடல் மற்றும் செயல்பாட்டுப் பிரிவு ........ 3
1.4.4 நிதிப் பிரிவு ........ 4
1.4.5 உள்ளக கணக்காய்வு பிரிவு ........ 4
1.5 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் ........ 5
1.5.1 தொழில் திணைக்களம் ........ 5
1.5.2 மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் ........ 6
1.5.3 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் ........ 7
1.5.4 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்... 7
1.5.5 வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் ........ 9
1.5.6 சிரம வாசனா நிதியம் ........ 10


**அத்தியாயம் இரண்டு**


2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு ........ 11
2.1 சட்ட விவகாரங்கள் ........ 11
2.1.1. தொழிற்சங்க உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட சட்டக கட்டமைப்பை வலுப்படுத்துதல் ........ 11
2.2 அபிவிருத்தி நடவடிக்கைகள் ........ 13
2.3 வெளி உறவுகள் ........ 15
2.3.1 சர்வதேச தொழிலாளர் தரநிர்ணய நிலைகளுடன் இணங்குதல் ........ 15
2.4 திட்டமிடல் மற்றும் செயற்பாடுகள் ........ 16
2.5 நிர்வாக மற்றும் தாபன விவகாரங்கள் ........ 17
2.6 தொழில் திணைக்களம் ........ 18
2.6.1. தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்புசார் மற்றும் சுகாதார மேம்பாடு ........ 18
2.6.1.1. தொழிற்சாலை பதிவு ........ 18
2.6.1.2.தொழிற்சாலை கட்டிட வரைபடங்களுக்கு அனுமதி…….. 18
2.6.1.3. தொழிற்சாலை பரிசோதிப்பு ஆய்வுகளை நடத்துதல்… 18
2.6.1.4. விபத்து புலனாய்வு விசாரணை ........ 19
2.6.1.5. இருதரப்பு பாதுகாப்பு குழுக்களை நிறுவுதல் ........ 19
2.6.1.6. அதி ஆபத்துள்ள இயந்திரங்களை பரிசோதிப்பு ஆய்வு செய்தல் ........ 20
2.6.2 ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பு ........ 20
2.6.2.1.ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் உறுப்பினர்கள் மற்றும் தொழில்தருநரின் பதிவு ........ 21
2.6.2.2. ஒருங்கிணைந்த தரவு அமைப்புகளைத் தயாரித்தல் மற்றும் கோப்புகளை மின்னணு முறையில் சேமித்தல். 21
2.6.3. ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான முன்னேற்றம் ……… 21

2.6.3.1. ஊழியர் சேமலாப நிதிய நன்மை அனுகூலங்களை செலுத்துதல்........ 21
2.6.3.2. பங்களிப்புகளை செலுத்தத் தவறிய தொழில்தருநர்களிடமிருந்து பங்களிப்புகளை அறவிட அறிவிப்புகளை அனுப்புதல்........ 23
2.6.4. தொழில்துறை இணைப்பு........ 23
2.6.4.1. தொழில்தருநர் மற்றும் பணியாளரின் இரு தரப்பினருக்கும் இடையே ஒரு உரையாடலைப் பேணுதல்........ 23
2.6.4.2. முதலாளிக்கும் ஊழியருக்கும் இடையே உரையாடலைப் பேணுதல்........ 24
2.6.4.3. நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளை நடத்துதல்........ 24
2.6.4.4. தொழில் தருநர்கள் மற்றும் ஊழியர்கள் இருவரும் கூட்டு ஒப்பந்தங்களில் ஈடுபட ஊக்குவித்தல்........ 24
2.6.4.5. கள ஆய்வுகளை நடத்துதல்........ 25
2.6.4.6. தொழிற்சங்கங்களின் பதிவு........ 25
2.6.4.7. வேலைநிறுத்தங்களைத் தீர்ப்பதற்கான தலையீடுகள் 25
2.6.4.8. வலய மற்றும் மாவட்ட ஆலோசனைக் குழுக்களை நடத்துதல்........ 26
2.6.4.9. சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்........ 26
2.6.5. ஊழியர்களின் வேலைவாய்ப்பு தொடர்பான உரிமைகளைப் பாதுகாக்க சட்டப் பாதுகாப்பு........ 26
2.6.6. தொழில் தர நியமங்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்........ 28
2.6.7. வேலை செய்யும் பெண்கள் மற்றும் இளம் ஆட்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்........ 29
2.6.8. சிறுவர் தொழிலாளர் முறையை இல்லாது ஒழித்தல்........ 30
2.6.8.1. 2025 ஆம் ஆண்டில் இலங்கையில் சிறுவர்த் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான தேசிய வழிகாட்டுதல் குழு நடத்தியகூட்டங்கள் பற்றிய தகவல்கள்........ 31
2.6.9. ஊடகங்கள் மூலம் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகளை நடத்துதல்........ 32
2.6.9.1. விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள். ........ 32
2.6.9.2. திணைக்கள ஊடக செயற்பாடுகள்........ 33
2.6.9.3. வெளியீடுகள்........ 34
2.6.9.4. தொழில் துறை தொடர்பான முக்கிய நினைவுகளை நடத்துதல்........ 35
2.6.10 திணைக்கள உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்........ 36
2.6.11 இலக்குகளை நோக்கி வழிநடத்தும் திணைக்களத்தின் பணிகளை கண்காணித்தல்........ 36
2.6.12 நிதி முகாமைத்துவம்........ 36
2.7. மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்........ 37
2.7.1. தொழில் சந்தை தகவல் பிரிவு........ 37
2.7.2. தொழில் வழிகாட்டுதல் பிரிவு........ 40
2.7.3. மனிதவள முகாமைத்துவ பிரிவு........ 42
2.7.4. பொது வேலைவாய்ப்பு சேவைகள் பிரிவு........ 43
2.7.5. நிதி முன்னேற்றம்........ 44
2.8. தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்........ 45
2.8.1. தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தால் செயல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்........ 46
2.9. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் திற்கான தேசிய நிறுவகம்........ 48

2.9.1. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்........ 48
2.9.2. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தால் நடத்தப்படும் கற்கைநெறிகள்........ 49
2.9.3. விசேட சமூக சேவை திட்டங்கள்........ 49
2.10. வேலையாளர் நட்டாஈட்டு ஆணையாளர் அலுவலகம்........ 51
2.11. சிரம வாசனா நிதி........ 54
2.12. எதிர்காலத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்........ 56

**அத்தியாயம் மூன்று**

3. நிதி முன்னேற்றம்........ 63
3.1 நிதி செயலாற்றுகை அறிக்கை........ 63
3.2 2025 டிசெம்பர் 31 இலுள்ளவாறு நிதி நிலைமைக் கூற்று........ 64
3.3 2025 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை........ 65
3.4 அறிக்கையிடலின் அடிப்படை........ 66
3.5 வருவாய் சேகரிப்பில் செயலாற்றுகைரு........ 67
3.6 ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதிலுள்ள செயலாற்றுகை........ 67
3.7 நி.பி 208 இன் நியதிகளின்படி ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இந்த அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதிசார் ஒதுக்கீட்டு ஏற்பாடுகள்........ 67
3.8 நிதி சாரா ஆதனங்களை அறிக்கையிடுவதில் செயலாற்றுகை ‘ரூபா 68
3.9 தலைமை கணக்காய்வாளர் அறிக்கை........ 69

**அத்தியாயம் நான்கு**

4. செயலாற்றுகை குறிகாட்டிகள்........ 75

**அத்தியாயம் ஐந்து**

5. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் செயலாற்றுகை (SDGs)....... 79

**அத்தியாயம் ஆறு**

6. மனித வள விவரம்........ 85
6.1 பதவியணி முகாமைத்துவம்........ 85
6.2 மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது உபரி நிறுவனத்தின் செயல்திறனை பாதித்த விதம்........ 87
6.3 ஊழியர்களின் இயலளவு விருத்தி........ 87
6.3.1 தொழில் அமைச்சு........ 87
6.3.2 தொழில் திணைக்களம்........ 90
6.3.3 மனிதவளம் மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்........ 102
6.3.4 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனம்.. 103
6.3.5 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்........ 104
6.3.6 சிரம வசன நிதி........ 104

**அத்தியாயம் ஏழு**

7. இணக்க அறிக்கை........ 107

**அட்டணைப் பெயர்ப் பட்டியல்** **பக்க எண்**


| | | |
|---|---|---|
| அட்டவணை 2.1 | பொது முறைப்பாடுகளுக்கு - சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனங்களின் அடிப்படையில்........ | 14 |
| அட்டவணை 2.2 | பிற நிறுவன நடவடிக்கைகளின் முன்னேற்றம்........ | 17 |
| அட்டவணை 2.3 | 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் அறிவிப்புகளை அனுப்புவதில் முன்னேற்றம்........ | 23 |
| அட்டவணை 2.4 | 2025.01.01 முதல் 2025.12.31 வரை நடத்தப்பட்ட கள சோதனைகள் பற்றிய தகவல் மேலும், கள ஆய்வுகளுக்குப் பிறகு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு அறிக்கைகளை டிஜிட்டல் ........ | 25 |
| அட்டவணை2.5 | பதிவான வேலைநிறுத்தங்கள் குறித்த தரவு - 2025.01.01 முதல் 2025.12.31 வரை........ | 25 |
| அட்டவணை 2.6 | பிற நீதிமன்றங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த 2025 ஆம் ஆண்டின் முன்னேற்றம் பின்வருமாறு........ | 27 |
| அட்டவணை2.7 | 2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசிய வழிகாட்டுதல் குழு கூட்டங்கள்........ | 31 |
| அட்டவணை2.8 | 2025 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள்........ | 32 |
| அட்டவணை2.9 | திணைக்களத்தின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் - 31.12.2025 நிலவரப்படி. | 37 |
| அட்டவணை2.10 | 2025.01.01 முதல் 2025.12.31 வரை தொழில் வழிகாட்டுதல் திட்டங்களை நடத்துவதில் முன்னேற்றம்........ | 42 |
| அட்டவணை2.11 | 2025.01.01 முதல் 2025.12.31 வரை மாவட்ட மற்றும் பிராந்திய வேலை கண்காட்சி முன்னேற்றம்........ | 43 |
| அட்டவணை2.12 | தொழில்தருனர் மாநாடுகள்........ | 44 |
| அட்டவணை2.13 | 31.12.2025 நிலவரப்படி நிதி முன்னேற்றம்........ | 44 |
| அட்டவணை2.14 | - 2025.01.01 முதல் 2025.12.31 வரை தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தால் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்........ | 46 |
| அட்டவணை2.15 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் நிதி முன்னேற்றம் - 31.12.2025 நிலவரப்படி........ | 47 |
| அட்டவணை2.16 | 31.12.2025 நிலவரப்படி நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை........ | 51 |
| அட்டவணை2.17 | 2025.01.01 முதல் 2025.12.31 வரையிலான காலகட்டத்தில் முடிக்கப்பட்ட வழக்கு கோப்புகளின் கால பகுப்பாய்வு........ | 51 |
| அட்டவணை2.18 | சிரம வாசனா நிதியின் வளர்ச்சி........ | 55 |
| அட்டவணை2.19 | சிரம வாசனா நிதியத்தின் லொத்தர் வருமானம்........ | 56 |
| அட்டவணை3.1 | வருவாய் சேகரிப்பில் செயலாற்றுகைரூ........ | 67 |
| அட்டவணை3.2 | ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதிலுள்ள செயலாற்றுகை | 67 |
| அட்டவணை3.3 | நி.பி 208 இன் நியதிகளின்படி ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இந்த அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதிசார் ஒதுக்கீட்டு ஏற்பாடுகள்........ | 67 |
| அட்டவணை3.4 | நிதி சாரா ஆதனங்களை அறிக்கையிடுவதில் செயலாற்றுகை ‘ரூபா........ | 68 |
| அட்டவணை4.1 | அமைச்சின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்........ | 75 |
| அட்டவணை5.1 | இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்........ | 79 |
| அட்டவணை6.1 | அமைச்சு மற்றும் அதன் இணை நிறுவனங்கள் தொடர்பான பணியாளர் தகவல்கள்........ | 85 |
| அட்டவணை6.2 | அமைச்சு மற்றும் அதன் இணை நிறுவனங்கள் தொடர்பான பணியாளர் தகவல்கள், நிறுவன ரீதியாக........ | 85 |
| அட்டவணை6.3 | உள்நாட்டு பயிற்சி வகுப்புகளில் அமைச்சு அதிகாரிகளின் பங்கேற்பு ........ | 87 |

| | | |
|---|---|---|
| அட்டவணை6.4 | வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களில் அமைச்சு அதிகாரிகளின் பங்கேற்பு...... | 90 |
| அட்டவணை6.5 | உள்நாடு பயிற்சி வகுப்புகளில் பங்கேற்பு - 2025...... | 90 |
| அட்டவணை 6.6 | வெளிநாட்டுப் பயிற்சி வகுப்புகள், பயிலரங்குகள் மற்றும் மாநாடுகளில் பங்கேற்பு - 2025...... | 100 |
| அட்டவணை 6.7 | பயிற்சி வகுப்புகளில் பங்கேற்பு...... | 102 |
| அட்டவணை 6.8 | திட்ட நிகழ்ச்சி கீழ் அதிகாரிகளுக்கு பயிற்சி...... | 103 |
| அட்டவணை 6.9 | பயிற்சி வகுப்புகளில் பங்கேற்பு...... | 103 |
| அட்டவணை 6.10 | பயிற்சி வகுப்புகளில் பங்கேற்பு...... | 104 |
| அட்டவணை 6.11 | சிரம வசன நிதி...... | 104 |
| அட்டவணை 7.1 | இணக்க அறிக்கை...... | 107 |


**வரைபடங்கள் பெயர்ப் பட்டியல்**


| | | |
|---|---|---|
| வரைபடம் 2.1 | 2021 முதல் 2025 வரை பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை.. | 18 |
| வரைபடம் 2.2 | 2021 முதல் 2025 ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் ஆய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலை கட்டிட வரைபடங்களின் எண்ணிக்கை........ | 18 |
| வரைபடம் 2.3 | 2021 முதல் 2025 வரை ஆண்டுதோறும் பரிசோதிப்பு ஆய்வு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை...... | 19 |
| வரைபடம் 2.4 | 2021 முதல் 2025 வரை பதிவான மற்றும் விசாரிக்கப்பட்ட விபத்துகளின் எண்ணிக்கை...... | 19 |
| வரைபடம் 2.5 | 2025 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளால் பரிசோதிப்பு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அதி ஆபத்துள்ள இயந்திர பரிசோதிப்பு ஆய்வு அறிக்கைகளின் எண்ணிக்கையின் வகைப்பாடு...... | 20 |
| வரைபடம் 2.6 | 2021 முதல் 2025 வரை ஊழியர் சேமலாப நிதிய வளர்ச்சி...... | 20 |
| வரைபடம் 2.7 | 2025.01.01 முதல் 2025.12.31 வரை ஊழியர் சேமலாப அனுகூலங்களை வழங்குவதற்காக அனுப்பப்பட்ட தீர்மானக் கடிதங்களின் எண்ணிக்கை...... | 22 |
| வரைபடம் 2.8 | ஊழியர் சேமலாப நிதிய அனுகூலங்களை செலுத்துவதற்கான தீர்மானக் கடிதங்களை அனுப்ப எடுக்கப்பட்ட நேரம் - 2025.01.01 முதல் 2025.12.31 வரை......... | 23 |
| வரைபடம் 2.9 | நீதவான் நீதிமன்றங்களில் குறிப்பிடப்பட்டு முடிக்கப்பட்ட வழக்குகள் - 2025.01.01 முதல் 2025.12.31 வரை ...... | 27 |
| வரைபடம் 2.10 | 2022 முதல் 2025 வரை பெறப்பட்ட சம்பளக் குறைப்புகளுக்கான கோரிக்கைகள் மற்றும் வழங்கப்பட்ட அனுமதிகள்...... | 28 |
| வரைபடம் 2.11 | 2022 முதல் 2025 வரையிலான 5 நாள் வேலை வாரத்திற்கான பெறப்பட்ட கோரிக்கைகள் மற்றும் வழங்கப்பட்ட அனுமதிகள்...... | 29 |
| வரைபடம் 2.12 | 2022 முதல் 2025 ஆம் ஆண்டு வரை சிறுவர் தொழிலாளர் தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாடுகள் குறித்து விசாரணைகளை நடத்துதல்...... | 30 |
| வரைபடம் 2.13 | செய்தி பத்திரிகை அடிப்படையிலான தேவை அடிப்படையிலான வெற்றிடபகுப்பாய்வு...... | 37 |
| வரைபடம் 2.14 | பாலினத்தின் அடிப்படையில் வெற்றிட பகுப்பாய்வு...... | 38 |
| வரைபடம் 2.15 | முகாமைத்துவ மட்டத்தின் அடிப்படையில் வெற்றிடங்களின் பகுப்பாய்வு...... | 38 |
| வரைபடம் 2.16 | துறை வாரியாக வெற்றிட பகுப்பாய்வு...... | 38 |
| வரைபடம் 2.17 | 31.12.2025 நிலவரப்படி நிதி முன்னேற்றம்...... | 45 |
| வரைபடம் 2.18 | 2025.01.01 முதல் 2025.12.31 வரை பதிவான உயிரிழப்பு விபத்துகளின் எண்ணிக்கை - விபத்தின் தன்மையின் அடிப்படையில்...... | 52 |

| | | |
|---|---|---|
| வரைபடம் 2.19 | 2025.01.01 முதல் 2025.12.31 வரை பதிவான உயிரிழப்பு அல்லாத விபத்துகளின் எண்ணிக்கை - விபத்தின் தன்மையின் அடிப்படையில்................................................ | 52 |
| வரைபடம் 2.20 | 2025.01.01 முதல் 2025.12.31 வரை பதிவான உயிரிழப்பு அல்லாத விபத்துகளின் எண்ணிக்கை - காயத்தின் தன்மையால்............................................................................ | 53 |
| வரைபடம் 2.21 | 2025.01.01 முதல் 2025.12.31 வரை பதிவான உயிரிழப்பு விபத்துகளின் எண்ணிக்கை - வேலைவாய்ப்புத் துறை வாரியாக......................................................... | 53 |
| வரைபடம் 2.22 | 2025.01.01 முதல் 2025.12.31 வரை பதிவான உயிரிழப்பு அல்லாத விபத்துகளின் எண்ணிக்கை - வேலைவாய்ப்புத் துறை பிரகாரம்............................................................ | 54 |
| வரைபடம் 2.23 | சிரம வாசனா நிதிய வளர்ச்சி.................................................................................................. | 55 |
| வரைபடம் 2.24 | சிரம வாசனா நிதியத்தின் லொத்தர் வருமானம்............................................................. | 56 |


***புகைப்படப் பட்டியல்***

| | | |
|---|---|---|
| புகைப்படம் 2.1 | சர்வதேச சிறுவர்த் தொழிலாளர் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கொழும்பு வடக்கு பொலிஸ் பிரிவின் கிராண்ட்பாஸ் பகுதியை உள்ளடக்கிய சிறுவர்த் தொழிலாளர் எதிர்ப்பு அணிவகுப்பு 12.06.2025 அன்று நடைபெற்றது. சுமார் 300 முதல் 400 பேர் கொண்ட குழுவினருக்கு விழிப்பூட்டல் அமர்வுகள் நடத்தப்பட்டன.............................................................................................................. | 35 |

அத்தியாயம் ஒன்று

# நிறுவனம்சார் விபரம் / நடைமுறைப்படுத்தல் பற்றிய சுருக்கம்

# நிறுவனம்சார் விபரத்தை செயல்படுத்தல் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறைகளில் உள்ள ஊழியர்களின் தொழில்முறை உரிமைகளைப் பாதுகாத்தல், சமூகப் பாதுகாப்பு, தொழிற்றுறை அமைதியை உறுதி செய்தல், பயிற்சி பெற்ற தொழிலாளர்களை தொழிற் சந்தைக்கு வழிநடத்துதல், தொழில் வாய்ப்பை உறுதி செய்தல், தொழிற் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் நாட்டில் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் பொருளாதார அபிவிருத்திக்கு உள்நாட்டு பணியாளர்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை வகுத்து செயல்படுத்துவதே தொழில் அமைச்சின் பிரதான பணியாகும். இந்தப் பணியை நிறைவேற்றுவதில், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் இலங்கையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சமவாயங்கள் அடிப்படையணியில் தாபித்த 2022.07.22 திகதியிட்ட 2289/43 ஆம் இலக்கம் மற்றும் 2024.11.25 திகதியிட்ட 2412/08 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்புகளின் அடிப்படையணியில் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகள் மற்றும் தேசிய கொள்கை அடிப்படையணியில் தாபிக்கப்பட்ட தொழில்விடயப்பரப்பு மற்றும் அமைச்சுடன் இணைக்கப்பட்ட நிறுவனங்களின் விடயப்பரப்பு தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும கருத்திட்டங்களை திட்டமிடுதல், செயற்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கையில் ஈடுபடல் இந்த அமைச்சின் பிரதான செயற்பாடு ஆகும்.

## 1.2. நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

### நோக்கு

திருப்திமிகு உற்பத்தித்திறன் கொண்ட இலங்கைத் தொழில்ணி

### செயற்பணி

தொழிற்றுறை அமைதி மற்றும் ஒத்துழைப்பு, சமூகப் பாதுகாப்பு, வேலையாட்கள் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மூலம் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல்.

### குறிக்கோள்கள்

- முத்தரப்பு வலுவூட்டல் மூலம் தொழில்தருநர்- பணியாளர் உறவுகளை வலுப்படுத்துதல்.
- சர்வதேச நியமத்துக்கேற்ப தொழில் நிலைமைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகளை உறுதி செய்தல்.
- சிறுவர் தொழில் முறையை ஒழித்தல்.
- தொழிற்புரியும் பெண்களுக்கு வலுவூட்டல், தொழில் பாதுகாப்பை வலுப்படுத்துதல் மற்றும் தொழில்முறை சட்டங்கள் மற்றும் உரிமைகளை உறுதி செய்தல்.
- தொழில் சட்டவாக்கங்கள் மற்றும் நடைமுறைகளின் இற்றைப்படுத்தல்.
- உழைக்கும் மக்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பொருத்தமான மூலோபாயங்களை வகுத்தல்.

## 1.3 அமைச்சின் முக்கிய செயற்பாடுகள்

- அரசாங்கத்தின் தேசியக் கொள்கையின் அடிப்படையணியில் தொழிலாளர் பிரச்சினைகளில் கொள்கைகளை வகுத்தல், திட்டமிடுதல், செயற்படுத்தல், கண்காணித்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல்
- தொழில் நியாயசபை மற்றும் நிர்வாகம் தொடர்பான விடயங்களைக் கையாளுதல்
- சர்வதேச நியமத்துக்கு இணங்க தொழிலாளர் உறவுகள், பணியாளர் நிர்வாகம், நலன்புரி மற்றும் சுகாதாரம் தொடர்பான கொள்கைகளை வகுத்து செயற்படுத்தல்;.
- சர்வதேச நியமத்துக்கு இணங்க தொழில்உறவுகள், தரநிலைகள், பணியாளர் நிர்வாகம், நலன்புரி, தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான கொள்கைகளை வகுத்து செயற்படுத்தல்.

- சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் சர்வதேச சமூக பாதுகாப்பு அமைப்புகளுடன் ஒத்துழைப்பைப் பராமரித்தல்.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சமவாயங்களை அங்கீகரித்தல் மற்றும் இலங்கையில் செயற்படுத்தல்
- சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.
- தொழிற் படையணியில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க உதவுதல்.
- தொழில் வழிகாட்டுதல் மற்றும் தொழில் அபிவிருத்தி, தொழில் சந்தை தகவல்களை சேகரித்து பகுப்பாய்வு செய்வதற்கு தேவையான ஆதரவு மற்றும் வழிகாட்டுதல்.
- தொழில் சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பற்றி அறிவுள்ள ஒரு தொழில் பணியாளர் குழுவை உருவாக்குவதற்குத் தேவையான பயிற்சி, ஆராய்ச்சி ஆகியவற்றைத் திட்டமிடுவதற்கும் செயல்படுத்துவதற்கும் வழிகாட்டுதலை வழங்குதல் மற்றும் வசதி செய்தல்.
- அமைச்சின் விடயப்பரப்பு எல்லைக்குள் வரும் மக்கள் சேவைகளை வினைத்திறனாக மற்றும் மக்கள் நட்பு முறையில் வழங்குதல்

## 1.4. அமைச்சின் கீழுள்ள பிரிவுகள்

### 1.4.1. நிர்வாகப் பிரிவு

நிர்வாகப் பிரிவு நிர்வாகம், நிறுவனங்கள் மற்றும் சட்டம் என மூன்று துணைப் பிரிவுகளின் கீழ் செயல்படுகிறது. அமைச்சின் நிர்வாகம், மனிதவள முகாமைத்துவம், பொது பராமரிப்பு, பணியாளர் பயிற்சி மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்புடைய பணிகள் நிர்வாக மற்றும் நிறுவனப் பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், புதிய போக்குகளுக்கு ஏற்ப தற்போதுள்ள தொழில் சட்டங்களைப் புதுப்பிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சமவாயங்களை செயல்படுத்துவதற்கும், பின்தொடர்வதற்கும் உதவும் புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் செயற்படுத்தல் போன்றவை சட்டப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. கூடுதலாக, நிர்வாகப் பிரிவால் செய்யப்படும் செயற்பாடுகள் பின்வருமாறு.

- அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயாரித்தல் மற்றும் அமைச்சரவை முடிவுகள் மீதான நடவடிக்கை.
- ஆலோசனைக் குழுக்கள், பொது மனு குழுக்கள் மூலம் செய்யப்படும் கவனக்குறிப்புகளுக்கு பதில்களை வழங்குதல் மற்றும் பாராளுமன்ற கேள்விகளுக்கு பதில்களை வழங்குதல்.
- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்டப்பூர்வ அமைப்புகளின் ஆண்டு அறிக்கைகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உத்தரவின்படி தொடர்புடைய அதிகாரிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிக்கைகளை சேகரித்து சமர்ப்பித்தல்.
- அமைச்சுக்குச் சொந்தமான அம்பாறை சுற்றுலா பங்களாவின் முன்பதிவு, பராமரிப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்
- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்டப்பூர்வ அமைப்புகளின் சொந்தமான நிலம் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான செயற்பாடுகள்.
- அமைச்சின் கீழுள்ள நியதிச் சட்டப்பூர்வ அமைப்புகளின் பணிப்பாளர்கள் குழுவை நியமிப்பது தொடர்பான செயற்பாடுகள்
- ஜூலை வேலைநிறுத்தக் கொடுப்பனவுகள் தொடர்பான செயற்பாடுகள்

### 1.4.2. அபிவிருத்தி பிரிவு

இந்தப் பிரிவு, அபிவிருத்தி மற்றும் வெளி உறவுகள் என இரண்டு துணைப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்தப் பிரிவுகளுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் இந்தப் பிரிவு வழிநடத்தி ஒழுங்கமைக்கிறது. சர்வதேச தொழிலாளர் அமைப்பு அந்த அமைப்பின் உறுப்பு

நாடாக இலங்கையுடன் ஏற்படுத்திய உறவு, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சமவாயங்கள் மற்றும் பரிந்துரைகளின் கீழ் நாட்டில் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் தொழில் துறையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கப் பயன்படுத்தக்கூடிய கொள்கை முடிவுகளை எடுத்தல் போன்ற சிறப்புப் பணிகளை இந்தப் பிரிவு செய்கிறது. இதன் கீழ் செய்யப்படும் முக்கிய செயற்பாடுகள் பின்வருமாறு.

- நாட்டில் இலங்கையால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சமவாயங்களை செயல்படுத்துவது தொடர்பான முன்னேற்றத்தை திட்டமிட்டபடி சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கு சமர்ப்பித்தல்.
- தொழில் துறையில் இலங்கை அடைந்த முன்னேற்றம் குறித்து, தேவைப்பட்டால், ஆர்வமுள்ள சர்வதேச சமூகத்திற்குத் தெரிவித்தல்
- சர்வதேச தொழிலாளர் அமைப்பிலிருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியைப் பெறுவதன் மூலம் தொழில் துறையுடன் தொடர்புடைய தற்போதைய பிரச்சினைகளைத் தீர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- தொழில் துறை தொடர்பான வெளிநாட்டு பங்குதாரர்களுடன் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ உடன்படிக்கைகளைச் செய்து, ஏற்கனவே உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/உடன்படிக்கைகளை புதுப்பித்து, அவற்றை செயல்படுத்துவதைப் பின்னாய்வு
- தொழில் துறை தொடர்பான வெளிநாட்டு பங்குதாரர்களுடன் பிராந்திய/உலகளாவிய உரையாடல்கள் மற்றும் கூட்டுக் குழு கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்தல்
- அமைச்சால் நடத்தப்படும் விசேட நிகழ்ச்சித் திட்டங்களை (நடமாடும் சேவைகள் போன்றவை) ஏற்பாடு செய்தல்
- சர்வதேச தொழிலாளர் அமைப்பிலிருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவைப் பெறுவதன் மூலம் பராமரிப்பு கூட்டுறவுத் திட்டங்களுக்கு (care cooperative) முக்கிய பங்குதாரராகச் செயல்படுதல்
- ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் அமைச்சருக்கு அனுப்பப்பட்டு, அமைச்சால் நேரடியாகப் பெறப்படும் பொது முறைப்பாடுகளை கையாளுதல் மற்றும் பின்னாய்வு

### 1.4.3 திட்டமிடல் மற்றும் செயல்பாட்டுப் பிரிவு

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள அனைத்து இணைக்கப்பட்ட நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை சரியான இலக்குகளின்படி செயல்படுத்த தேவையான திட்டங்களைத் தயாரித்தல், அவற்றை செயற்படுத்தல், முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் பின்னாய்வு செய்தல் ஆகியவை இந்தப் பிரிவின் முக்கிய செயற்பாடுகளாகும், மேலும் பின்வரும் செயற்பாடுகளும் செய்யப்படுகின்றன.

- தேசிய கொள்கை சட்டக கட்டமைப்பிற்கு ஏற்ப மூலோபாயத் திட்டம் மற்றும் வருடாந்த செயல் திட்டங்களைத் தயாரித்தல், அவற்றை செயற்படுத்தல் மற்றும் முன்னேற்றம் குறித்து அறிக்கையிடுதல்.
- அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி இலக்குகளை உள்ளடக்கிய வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்து, அதை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுப்புதல், அதை செயற்படுத்தல் மற்றும் ஒவ்வொரு மாதமும் முன்னேற்றத்தை மதிப்பிடுவதன் மூலம் இலக்குகளை அடைவதை கண்காணித்தல் மற்றும் ஊக்குவித்தல்
- தேசிய வரவுசெலவு சுற்றறிக்கைகளின்படி ஜனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் ஒருங்கிணைத்தல் மற்றும் மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பித்தல்
- வருடாந்த வரவுசெலவு மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான திட்ட முன்மொழிவுகளை அடையாளம் கண்டு சமர்ப்பித்தல்
- வரவுசெலவு குழு விவாதத்திற்கான அமைச்சால் அடையப்பட்ட முன்னேற்றம் மற்றும் முன்னேற்ற அறிக்கை உள்ளிட்ட வருடாந்த செயலாற்ற அறிக்கையைத் தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

- தொழில் விடயப்பரப்புக்கு  தொடர்புடைய அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து, பொருத்தமான முறையில் தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு அனுப்புதல்
- பல்வேறு அமைச்சுகளால் செயல்படுத்தப்படும் செயல் திட்டங்களுக்கு பொருத்தமான பங்களிப்புகளை வழங்குதல்

### 1.4.4. நிதிப் பிரிவு

வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் அரசாங்கக் கொள்கைகளுக்கு ஏற்ப வினத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதே நிதிப்  பிரிவின் முக்கிய பொறுப்பாகும்.

- தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி வருடாந்த பொருட் கணக்கெடுப்பை நடத்துதல்
- நிதி அதிகாரசபையின் நிறுவனம் தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் நிதி அதிகாரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது
- வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மதிப்பீடுகளைத் தயாரித்தல்
- ஆண்டிற்கான நிதி அறிக்கையைத் தயாரித்தல்
- அரசாங்கக் கணக்குகள் குறித்த குழு அறிக்கையைத் தயாரித்தல்.
- திறைசேரி மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களுக்கு மாதாந்த மற்றும் காலாண்டு நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்
- கணக்காய்வு விசாரணைக் கோப்புகளை இற்றைப்படுத்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் தொடர்புடைய கணக்காய்வு வினவல் விசாரணைகளுக்கான பதில்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புதல்

### 1.4.5. உள்ளக கணக்காய்வு பிரிவு

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(ஆ) மற்றும் (எ) பிரிவில் தரப்பட்டவாறு பிரதம கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பு ஆற்றப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு அச் சட்டத்தின் 40 ஆம்
பிரிவின்படி மேற்கொள்ளப்பட்டுள்ள நியமனங்கள் மற்றும் நிதி ஒழுங்குவிதி 133 மற்றும் 144 இன்படி
உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களத்தின் 2019.01.12 ஆம் திகதியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளின் படி அமைச்சின் உள்ளக கணக்காய்வுச் செயற்பாடுகள் ஆற்றப்படுகின்றன.

தொழில் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பொறுப்பு மற்றும் அவசியத்தின் படி, விசேட விசாரணைகள் உள்ளக கணக்காய்வு பிரிவின் எல்லைக்குள் உள்ளன.

- நிறுவனங்களுக்குள் செயல்படுத்தப்படும் உள்ளக கணக்காய்வு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பின் செயல்திறனை ஆய்வு செய்தல்
- நிறுவனங்கள் அரசு நிறுவன தாபன கோவை, அரசு நிதி பிரமாண விதிமுறைகள் மற்றும் பொது நிர்வாகம் மற்றும் திறைசேரிக்கு பொறுப்பான அமைச்சால் அவ்வப்போது தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் பிற துணை அறிவுறுத்தல்களுக்கு இணங்க வேண்டும் என்பதோடு தொழில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை தேடிப்பார்த்தல்
- தொழில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் இலக்கு மற்றும் நோக்கங்கள் மற்றும் கணக்காய்வுக் கொள்கைகள் அமைப்பின்படி உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்தல்.
- அமைச்சின் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கொள்கைகள், திட்டங்கள், நடைமுறைகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக நிறுவப்பட்ட கட்டுப்பாட்டு அமைப்புகளை மதிப்பீடு செய்தல்
- சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் சொத்துக்களின் இருப்பை உறுதி செய்வதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மதிப்பீடு செய்து சரிபார்த்தல்

- அமைச்சின் நிறுவப்பட்ட நோக்கங்களுக்கு ஏற்ப பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளதா என்பதைத் தீர்மானிக்க நடவடிக்கைகள் அல்லது திட்டங்களை மதிப்பீடு செய்து தகவல் ஆய்வு செய்தல்
- நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவிற்கும் பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு செயல்முறைகள் மற்றும் இடரநேர்வு முகாமைத்துவ செயல்முறைகளை நிறுவுவதற்குத் தேவையான வழிகாட்டுதலை வழங்குதல்
- கணக்காய்வு செயல்முறைக்குப் பிறகு தொடர்புகொண்டு தேவையான திருத்த நடவடிக்கைகளைச் சமர்ப்பித்தல்
- வருடாந்த கணக்காய்வு திட்டத்தின் தயாரிப்பு மற்றும் செயல்படுத்தல்
- முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்துக்கு அனுப்ப வேண்டிய அறிக்கைகளை உரிய திகதியில் சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழு கூட்டத்தை கூட்டுவதற்கும் நடத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- நிர்வாகத்தால் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட கடமைகளைச் செய்தல் மற்றும் அறிக்கையிடல்

## 1.5. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்

### 1.5.1. தொழில் திணைக்களம்

இலங்கையில் மொத்த பணியாளர்களில் பெரும்பான்மையினரை பிரதிநிதித்துவப்படுத்தும் தனியார் மற்றும் பகுதி அளவிலான அரசத்துறை ஊழியர்களுக்கு வழங்கப்படும் உரிமைகளை உறுதி செய்வதன் மூலமும், தொழில் தருநர் -பணியாளர் உறவுகளை மேம்படுத்துவதன் மூலமும், நிறுவன மட்டத்தில் தொழில்துறை அமைதியைப் பாதுகாப்பதன் மூலமும் ஒரு ஒழுக்கமான பணிச்சூழலை உருவாக்குவதே தொழில் திணைக்களத்தின் முக்கிய வகிபங்கு ஆகும்.

நூறு ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட தொழில் திணைக்களம், டிஜிட்டல் மயமாக்கல் மூலம் மிகவும் திறமையான சேவைகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளில் தற்போது இறங்கியுள்ளது. குறிப்பாக, மின்னணு சேவைகள் (e-services) அறிமுகப்படுத்தப்படுவது வாடிக்கையாளர்கள் தங்கள் தேவைகளை மிகவும் எளிதாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பை வழங்கும்.

அதன்படி, தொழில் தருநர்-பணியாளர் உறவுகளை வளர்ப்பதன் மூலமும், ஊழியர் உரிமைகளை வலுப்படுத்துவதன் மூலமும் தொழில்துறை அமைதியை மேம்படுத்துவதற்கு திணைக்களம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

**முக்கிய செயற்பாடுகள்**

- சமூக உரையாடலை ஊக்குவிப்பதன் மூலம் நிறுவன மட்டத்தில் தொழில் தருநர்-பணியாளர் உறவை வலுப்படுத்துதல்
- தொழில் சட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்
- மத்தியஸ்தம், கூட்டு ஒப்பந்தங்கள் மற்றும் நடுவர் போன்ற முறைகள் மூலம் தொழில்துறை பிணக்குகளைத் தீர்த்தல்
- ஊழியர் சேமலாப நிதியம் மூலம் ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பிற்காகப் பணியாற்றுதல்
- ஊழியர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் பணியாற்றுதல்
- சிறுவர் தொழிலாளர் முறையை ஒழித்தல்
- வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ள பெண்கள் மற்றும் இளம் ஆட்களின் தொழில் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்
- ஊதியங்கள் மற்றும் பணி நிலைமைகளை வலுப்படுத்துவதன் மூலம் தொழில் தரநிர்ணயங்களைப் பாதுகாத்தல்
- தொழில் துறையில் முடிவெடுப்பதற்குத் தேவையான தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் தேவைக்கேற்ப வெளியிடுதல்.

### திணைக்கள கட்டமைப்பு




### தொழில் திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள்

- ✓ தொழில்துறை உறவுகள் பிரிவு
- ✓ விசேட புலனாய்வுப் பிரிவு
- ✓ தொழில் தரநிர்ணய பிரிவு
- ✓ தொழில்துறை பாதுகாப்புப் பிரிவு
- ✓ தொழில்சார் பாதுகாப்புப் பிரிவு
- ✓ பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவு
- ✓ ஊழியர் சேமலாப நிதிப் பிரிவு
- ✓ நிர்மாண மற்றும் பராமரிப்பு பிரிவு
- ✓ சட்ட விவகாரங்கள் பிரிவு
- ✓ கட்டுப்பாட்டுப் பிரிவு
- ✓ நிதிப் பிரிவு
- ✓ திட்டமிடல் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு
- ✓ தகவல் தொழில்நுட்பப் பிரிவு
- ✓ உள்ளக கணக்காய்வுப் பிரிவு
- ✓ புள்ளிவிபரவியல் பிரிவு

### 1.5.2. மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

12.02.2010 திகதியிட்ட 1640/31 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் விதிகளின்படி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் 2010 இல் தொழில் உறவுகள் மற்றும் மனிதவள அமைச்சின் கீழ் நிறுவப்பட்டது மற்றும் தற்போது தொழில் அமைச்சின் கீழ் செயல்பட்டு வருகிறது. A-தரத் திணைக்களமாக நிறுவப்பட்ட இந்த திணைக்களம் வேலைவாய்ப்பு அபிவிருத்தி, வேலைவாய்ப்பு திட்டமிடல், வேலைவாய்ப்பு மற்றும் தொழில் சந்தை தகவல் மற்றும் தொழில் வழிகாட்டுதல் திட்டங்கள் ஆகிய விடயங்கள் தீர்மானிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக இந்தத் திணைக்களத்துக்கு மக்கள் வேலைவாய்ப்பு சேவைகளைப் பராமரிப்பதற்கும் தேசிய மனிதவளம் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையின் விதிகளை செயல்படுத்துவதற்குமான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த திணைக்களத்தால் இதுவரை தொழில் சந்தை தகவல் பிரிவால் நடத்தப்பட்ட கணக்கெடுப்புத் தகவல்களைப் பயன்படுத்தி, தொழில் வழிகாட்டுதல் மற்றும் வேலை உருவாக்கம் அபிவிருத்தி தொடர்பான மாவட்ட மற்றும் பிரதேச ரீதியான நிகழ்ச்சித் திட்டங்கள்

செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம், வேலையற்ற இளைஞர்கள் மற்றும் யுவதிகள் தனியார் துறையில் வேலைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

### 1.5.3. தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், 2007 செப்டம்பர் 11, அன்று நிறுவப்பட்டதோடு, 2010 இலக்கம் 12 தாங்கிய தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டத்தால் இந்த நிறுவகம் செயல்படுத்தப்பட்டது. தொழில் துறையில் முத்தரப்பு பங்காளர்களான தொழில் தருநர், ஊழியர்கள் மற்றும் அரசு ஊழியர்களைக் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவால் நிறுவகம் நிர்வகிக்கப்படுகிறது.

தொழில் சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்து அறிவு மற்றும் உற்பத்தித் திறன் கொண்ட பணியாளர்களை உருவாக்குவதற்குத் தேவையான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளைத் திட்டமிட்டு செயல்படுத்துவதே இந்த நிறுவகத்தின் முதன்மைப் பணியாகும். தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் தற்போது தொழில் செயலக கட்டிடத்தின் இரண்டாவது மாடியில் நிறுவப்பட்டுதுள்ளது.**முக்கிய செயற்பாடுகள்**

- உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களோடு ஒத்துழைப்புடன் தொழில் கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அபிவிருத்திச் செயன்முறைக்கு உயிரோட்டமான பங்காளர்களாக ஊழியர்களின் நலனை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- தொழில் கற்கை பற்றிய கருத்தரங்குகள், செயலமர்வுகள், கூட்டங்கள் நடத்தப்படுதல் மற்றும் சஞ்சிகைகள், வார இதழ்கள் மற்றும் புத்தகங்களை வெளியிடுதல்.
- ஆராய்ச்சி நடத்துதல், கணக்கெடுப்புகளை நடத்துதல் மற்றும் தொழில்கற்கைகள் தொடர்பான கற்கைநெறிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தல், நூலகங்கள் மற்றும் தகவல் சேவைகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்
- தேசிய தொழில் கற்கை நிறுவகத்தின் நோக்கங்களைப் போன்ற நோக்கங்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், அமைப்புகள், சங்கங்கள் மற்றும் கழகங்களோடு நெருங்கிய ஒத்துழைப்புடன் பணியாற்றுதல்
- பல்கலைக்கழகங்கள் மற்றும் ஒத்த நிறுவனங்களின் உதவியுடன் தொழில் ஆய்வுகள் குறித்த டிப்ளோமா கற்கைநெறிகள் உள்ளிட்ட கற்கைகளை நடத்துதல் மற்றும் தேவையான இடங்களில் டிப்ளோமாக்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல்
- தொழில்துறை நல்லிணக்கத்தைப் பேணுவதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

### 1.5.4. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

இலங்கையில் நல்ல தொழில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் நல்ல சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியாளர்களை உருவாக்கும் நோக்கத்துடன் **2009** ஆம் ஆண்டு **38** ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனச் சட்டத்தின் மூலம் தேசிய தொழிலசார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் நிறுவப்பட்டது.

தினசரி சுற்றுச்சூழல் அளவீட்டு ஆய்வுகள், இடர்நேர்வு மதிப்பீடுகள் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் மூலம், அத்துடன் விசேட நிகழ்ச்சித் திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும் பயிற்றுவித்தல், செயற்றிட்டங்கள் மூலம் மற்றும் பிற நாடுகளுடனான சர்வதேச ஒத்துழைப்பு அடிப்படையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மூலம் இலங்கையில் உற்பத்தித் திறன் கொண்ட பணியாளர்களை உருவாக்குவதற்கு இந்த நிறுவனம் செயல்படுகிறது.

**முக்கிய செயற்பாடுகள்**

- தொழில்தருநர் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் பணியின் தன்மையைக் கருத்தில் கொண்டு, தொழில்தருநர் மற்றும் பணியாளர்கள் இருவரின் பணிச்சூழலிலும் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த தேசிய கொள்கையை வகுப்பதில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.
- பணியிடங்களில் வேலை தொடர்பான விபத்துக்கள் மற்றும் காயங்களைத் தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்
- தொழிலசார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் விசாரணைகள், கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், கணக்கெடுப்புகள் மற்றும் ஆராய்ச்சிகளை நடத்துதல் மற்றும் ஆதரித்தல்.
- உபகரணங்கள், அபாயகரமான பொருட்கள், பௌதிகவியல்;, இரசாயனவியல் அல்லது உயிரியல் முகவர்கள் அல்லது தயாரிப்புகள் அல்லது வேறு ஏதேனும் அபாயகரமான பொருட்களின் சரியான பயன்பாடு குறித்து எந்தவொரு நிறுவனம் அல்லது நபருக்கும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- வேறு ஏதேனும் நிறுவனம் அல்லது இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள பல்கலைக்கழகத்துடன் இணைந்து, தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மற்றும் தொடர்புடைய பாடங்களில் கல்வி மற்றும் பயிற்சி தேவைப்படும் ஊழியர்கள், குடியிருப்பாளர்கள், தொழிலாளர்கள் அல்லது வேறு எந்த நபருக்கும் கல்வி மற்றும் தேவையான பயிற்சியை வழங்குதல் மற்றும் அத்தகைய கல்வி அல்லது பயிற்சியை முடித்தவுடன் சான்றிதழ்கள் அல்லது டிப்ளோமாக்களை வழங்குதல்.
- உபகரணங்கள், அபாயகரமான பொருட்கள், பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் பொருட்கள் அல்லது தயாரிப்புகளை சரியாகப் பயன்படுத்துவதற்கும், உள சமூக ரீதியான ஆபத்துகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட ஆபத்துகளைத் தடுப்பதற்கும் தேவையான சேவைகளை வழங்குதல்.
- தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான விடயங்களில் தரநிலைகள், சின்னங்கள், நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் தொடர்பான சட்டத் தேவைகள் குறித்து அமைச்சருக்குத் தகவல்களை வழங்குதல் மற்றும் சரியாக செயற்படுத்தப்படுகின்றதா என மேற்பார்வை செய்தல் மற்றும் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை மதிப்பீட்டுக்குட்படுதல்.
- தொழிலசார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல், தயாரித்தல், பரப்புதல் மற்றும் வெளியிடுவதில் ஒத்துழைத்தல்.
- தொழிலசார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த கருத்தரங்குகள், செயலமர்வுகளை மற்றும் பிற நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்தல் உதவி வழங்கல்
- தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த அமைச்சுகளுக்கு இடையேயான நிகழ்ச்சித்திட்டங்கள், செயல்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்
- தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் பயிற்சியை மேம்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் நூலகங்கள் மற்றும் ஆய்வகங்களை நிறுவி கொண்டு நடத்தல்
- ஆராய்ச்சி மற்றும் விசேட ஆய்வகங்களை உருவாக்குதல்
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையுடன் தொடர்புடைய தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் உறவுகளைப் பேணுதல்
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளில் தேசிய தரநிர்ணயத்தை தாபித்தல்

### 1.5.5. வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்

சேவையில் ஈடுபட்டுள்ள போது இடம்பெறுகின்ற விபத்துகள் தொடர்பில் நட்ட ஈடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்ட ஈட்டு கட்டளைச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. சிற்சில சந்தர்ப்பங்களில் இச்சட்டத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு இறுதித் திருத்தம் 2022 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேலையாளர் நட்ட ஈட்டு நீதிமன்றம் மாவட்ட நீதிபதி மற்றும் நீதவானின் அதிகாரங்களோடு ஒட்டுமொத்த நாடும் உள்வாங்கப்படும் வகையில் 14 சுற்றுலா நீதிமன்றங்களைக் கொண்டமைந்துள்ளது. நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நீதித்துறை உத்தியோகத்தர்களான வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர், மேலதிக வேலையாளர் நட்ட ஈட்டு ஆணையாளர் மற்றும் பிரதி வேலையாளர் நட்ட ஈட்டு **ஆ**ணையாளர் ஆகிய 03 பதவிகளையும், இலங்கை

கணக்காளர் சேவையின் **I** ஆம் வகுப்பு பதவி ஒன்றையும் இலங்கை நிர்வாக சேவையின் பதவி ஒன்றையும் உள்ளிட்டதாக 43 பதவிகளைக் கொணடமைந்துள்ளது.
சேவையில் ஈடுபட்டுள்ளபோது இடம்பெறுகின்ற விபத்துகளினால் காயங்களுக்கு உள்ளாகின்ற தொழிலாளர்களுக்கும் தொழிலின் தன்மை காரணமாக ஏற்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கும் சேவையில் ஈடுபட்டுள்ள போது ஏற்படுகின்ற விபத்துகளினால் மரணமடைகின்ற தொழிலாளர்களில் தங்கி வாழ்வோருக்கும் நட்ட ஈடுகளை அறவிட்டுக் கொடுப்பது பிரதான நோக்கமாகும்.

வேலையாளர் நட்ட ஈட்டு நீதிமன்ற செயன்முறைக்காக குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவை, சிவில் நடவடிக்கை முறைக் கோவை மற்றும் சாட்சிகள் கட்டளைச்சட்டம் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படுவதோடு மேன்முறையீட்டு நடவடிக்கை முறையானது மாவட்ட நீதிமன்றத்திற்கு ஒத்ததாகும்.

**முக்கிய செயற்பாடுகள்**

- அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு சேவையில் ஈடுபட்டுள்ளபோது ஏற்படுகின்ற விபத்துகள், தொழில்சார் நோய்வாய்கள் மற்றும் மரணத்தின் போதெனில் அவர்களில் தங்கி வாழ்வோருக்கு நட்டஈடுகளை அறவிட்டு வழங்கும் நடவடிக்கைகள் (2022 ஆம் ஆண்டில் **10** ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள இறுதி திருத்தத்தின் பிரகாரம் வழங்கப்படக்கூடிய உச்சமட்ட நட்டஈட்டுத் தொகை 2,000,000/= ரூபாவாகும்
- பராயமடையாதவர்கள் பூரண வயதை அடையும்வரை வேலையாளர் நட்ட ஈட்டு ஆணையாளரின் பொறுப்பில் தேசிய சேமிப்பு வங்கியில் கணக்குகளைப் பேணி வருதல் மற்றும் அவற்றுக்கான நிர்வாக நடவடிக்கைகள்.
- தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற விபத்துகளின் போது தொழில் கொள்வோர் நட்ட ஈடு செலுத்தத் தவறியுள்ள சந்தர்ப்பங்களில் அவர்களின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களைத் தடை செய்து அவற்றை பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்து நட்ட ஈட்டுத் தொகைகளை அறவிட்டுக் கொடுத்தல்.
- வேலையாளர் நட்ட ஈட்டுக் காப்புறுதி உரிமப் பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல், உரிமங்களை இரததுச் செய்வதற்கான நடவடிக்கைகள்.
- தொழிலாளர் ஒருவருக்கு விபத்து ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவ்விடத்திற்குச் சென்று சோதித்துப் பார்த்தல்.
- இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கப்பல்களின் மற்றும் விமானங்களின் ஊழியர்களுக்கு இலங்கைக்கு வெளியில் ஏற்படுகின்ற விபத்துகளுக்காக நட்டஈடுகளை அறவிட்டு வழங்குதல்.

### 1.5.6. சிரம வாசனா நிதியம்

1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க (2019 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட சிரம வாசனா நிதியம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழுள்ள தொழிலாளர்களின் நலனோம்பலுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். சிரம வாசனா நிதியச் சட்டத்தில் காணப்படுகின்ற 6 குறிக்கோள்களின் அடிப்படையில் ஆரம்பத்திலிருந்து இதுவரை பல்வேறுபட்ட நலனோம்பல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு இலங்கைத் தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக செயற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

தற்போது, சிரம வாசனா நிதியத்தால் வழங்கப்படும் முக்கிய வருமான ஆதாரம், தேசிய லொத்தர் சபையினால் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இழுக்கப்படும் " NLB ஜெய" லொத்தரியிலிருந்து பெறப்படும் வருமானமாகும். இந்த வருமானம் லொத்தர்விற்பனையால் தீர்மானிக்கப்படுகிறது, மேலும் லாட்டரி விற்பனையின் வளர்ச்சியுடன், தொழிலாளர்களின் நலனுக்காக வழங்கப்பட வேண்டிய சேவைகளையும் அதிகரிக்க முடியும்.

**முக்கிய செயற்பாடுகள்**

- தொழிலாளர்களினதும் அவர்களில் தங்கி வாழ்வோரினதும் நலனோம்பலை மேம்படுத்துதல்
- தொழிலாளர்கள் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் முன்னறிவித்தல் இன்றி மூடப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அத்தொழிலாளர்களுக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்.
- அவசர சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களுக்கும் அவர்களில் தங்கி வாழ்வோருக்கும் மருத்துவ மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.
- தொழிலாளர்களுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போது அவர்களுக்கு தற்காலிக உதவிகளை வழங்குதல்
- பேரழிவு சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களுக்கும் அவர்களில் தங்கி வாழ்வோருக்கும் நிதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.
- தொழிலாளர்களின் நலனோம்பலுக்காக சிறந்த சேவையை ஆற்றியுள்ள நபர்களுக்கு பரிசில்களை வழங்குதல்.

அத்தியாயம் இரண்டு

# முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

# முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு

இலங்கை மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல திணைக்களத்தின் 2024 தொழில் அணி கணக்கெடுப்பின்படி, நாட்டின் தொழிலாளர் படை 8.3 மில்லியன் ஆகும், அதில் 7.9 மில்லியன் பேர் பணிபுரிகின்றனர். அதே திணைக்களத்தின் தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின்படி இலங்கையில் தொழில் அணி 8.46 மில்லியன் ஆகும், இதில் 8.09 மில்லியன் பேர் பணிபுரிகின்றனர். அரசு ஊழியர்கள், சொந்த தொழில்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் குடும்ப தொழில்களுக்கு பங்களிப்பவர்கள் தவிர, தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறைகளில் உள்ள ஊழியர்களின் தொழில் உரிமைகள், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலம் நாட்டில் தொழில்துறை அமைதியைப் பேணுவதற்கு இந்த அமைச்சு பொறுப்பாகும். இதற்காக, அமைச்சும் அதன் இணைப்பு நிறுவனங்களும் பல திட்டங்களை செயற்படுத்தி வருகின்றன.

அதன்படி, இந்த அத்தியாயம், அமைச்சும் அதன் இணைப்பு நிறுவனங்களும் அதன் நோக்கங்களை அடைய மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் தொடர்பாக, டிசம்பர் 31, 2025 நிலவரப்படி அமைச்சும் அதன் அதன் கீழ் வரும் நிறுவனங்களும் அடைந்த முன்னேற்றத்தின் சுருக்கத்தைக் கொண்டுள்ளது.

## 2.1 சட்ட விவகாரங்கள்

### 2.1.1 தொழிற்சங்க உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட சட்டக கட்டமைப்பை வலுப்படுத்துதல்

இலங்கையில் முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கும் நாடு எதிர்கால செழிப்பை அடைவதற்கும் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மற்றும் தேசிய சமூக, பொருளாதார நிலைமைகள் மற்றும் தொழிலாளர் சமவாயங்கள் மற்றும் தர நிலைகளுக்கு ஏற்ப சட்ட ஏற்பாடுகள் செய்யப்படுவதை உறுதி செய்வது இந்த அமைச்சின் காலோசிதமான பொறுப்பாகும். தற்போது, தொழிலாளர் சமூகத்தின் உரிமைகள் மற்றும் நலனை உறுதி செய்வதற்காக இலங்கையில் சுமார் 50 கட்டளைச் கட்டங்கள் மற்றும் விதிமுறைகள் நடைமுறையில் உள்ளன. தொழில் திணைக்களம் அதன் தொடக்கத்திலிருந்து அவ்வப்போது இந்த சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை இயற்றியுள்ளது. நவீன வேலை உலகின் சவால்களை எதிர்கொள்ள இந்த சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- **நிகழ்காலத்திற்கு ஏற்ற விதிகளுடன் தொழில் சட்டங்களைத் திருத்துதல்**

தொழில் திணைக்களத்தால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கட்டளைச் சட்டங்கள் தற்போதைய சமூக-பொருளாதார மாற்றங்களையும் வேலை உலகில் ஏற்படும் தொடர்புடைய மாற்றங்களையும் நிவர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. வணிகங்களின் தொடர்ச்சியான இருப்பை உறுதிசெய்து, ஊழியர் சமூகத்தின் உரிமைகளை உறுதி செய்வதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதை எளிதாக்கும் தொழில் சட்டத்தின் தேவை தற்போது எழுந்துள்ளது. மேலும், சட்டங்களுக்கு இடையில் உள்ள சிக்கல்களை நீக்கி அவற்றை எளிமைப்படுத்துவதன் மூலம் அனைத்து தரப்பினருக்கும் நன்மைகளை உறுதி செய்வது அவசியம். இதற்காக, தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களின் தற்போதைய விதிகளைத் திருத்துவதற்காக 2025.08.04 திகதியிட்ட அமைச்சரவையின் அனுமதியுடன் ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டது. 31.12.2025 நிலவரப்படி, இந்த நிபுணர் குழு 09 நாட்கள் கூடி, ஆசிய நாடுகளில் தற்போதைய தொழில் சட்ட சீர்திருத்தங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட வேலை உலகில் புதிய போக்குகள் மற்றும் இலங்கை தற்போது அங்கீகரித்துள்ள மற்றும் எதிர்காலத்தில் அங்கீகரிப்பதற்கு உள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பு சமவாயங்களின் விதிகளை உள்ளடக்கிய தொழில் தரநிர்ணய நிலைகள்(Labour Standards),தொழில்துறை உறவுகள், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் (Occupational Safety and Health) மற்றும் தொழிற்சங்கங்கள் (Trade Unions) ஆகிய தொடர்பில் நான்கு சட்டங்களை இயற்றும் நோக்கத்துடன் சட்ட சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **2025 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசிய ஊழியர்களின் குறைந்தபட்ச ஊதியம் (திருத்தம்) சட்டம், 2025 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழியர்களின் பாதீட்டு நிவாரண கொடுப்பனவு (திருத்தம்) சட்டம் மற்றும் 2025 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஊழியர்களின் பாதீட்டு நிவாரண கொடுப்பனவு (திருத்தம்) சட்டம் ஆகியவற்றை விதித்தல்**

மேற்கண்ட மூன்று சட்டங்களும் 2025 ஆம் ஆண்டு பாதீட்டு முன்மொழிவுகளின்படி 2025.07.22 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் தேசிய குறைந்தபட்ச மாதாந்த ,ஊதியம் ரூ. 27,000.00 ஆகவும், தினசரி குறைந்தபட்ச ஊதியம் ரூ. 1,080 ஆகவும் அதிகரிக்கப்பட்டது, மேலும் 2026 ஜனவரி 01 ஆம் தேதி முதல் தேசிய குறைந்தபட்ச மாதாந்த ஊதியம் ரூ. 1,080 ஆகவும் அதிகரிக்கப்பட்டது. 30,000.00 ஆகவும், தினசரி ஊதியம் ரூ. 1,200.00 ஆகவும் அதிகரிக்கப்பட்டது.

- **தங்குமிட வசதி கொண்ட ஹோட்டல்களில் பணியாளர்களாகப் பணியாற்றும் பெண்கள் இரவுப் பணியில் ஈடுபடுவதற்கு ஏதுவாக, 1954 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் (சேவை மற்றும் ஊதிய ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ் விதிமுறைகளைத் திருத்துதல்**

சுற்றுலாத் துறை தற்போது வேகமாக வளர்ந்து வருவதால், பெண்கள் அவர்களுக்கு ஹோட்டல்கள் மற்றும் தங்குமிட வசதிகளை வழங்கும் சேவையில் பங்களிக்க அதிக வாய்ப்புகளை வழங்கும் வகையில், தற்போதுள்ள சட்டக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது காலத்தின் தேவையாக மாறியுள்ளது. அதன்படி, தங்குமிட வசதியுள்ள ஹோட்டல்களில் பணியாளர்களாகப் பெண்களைப் பணியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் உட்பட, இந்தச் சட்டத்தின் பிரிவு 66 இன் கீழ் செய்யப்பட்ட 3வது உத்தரவைத் திருத்துவதற்கான தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்பு 30.01.2026 அன்று பாராளுமன்றத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- **ஊழியர்களின் நலனுக்கும் இன்றைய காலத்திற்கும் ஏற்ற வகையில் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தில் திருத்தம்**

அமைச்சரவை முடிவு இலக்கம் அவி/24/1234/625/017 மற்றும் 01.07.2024 திகதியிட்டபடி, ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தில் ஒரு வரைவு திருத்தம் 06.08.2024 அன்று சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், தற்போதைய அரசாங்கக் கொள்கைகளைக் கருத்தில் கொண்டு, ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களுக்கு மிகவும் வினைத்திறனான சேவையை வழங்குவதற்குத் தேவையான திருத்தங்களை மேலும் அடையாளம் காணவும், உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகளின் உயர் கல்வியைத் தொடர 30% அனுகூல நன்மைப் பணத்தை விடுவிப்பதற்கான நிபந்தனைகளைத் தளர்த்தவும், வழக்குகளை விளைதிறனாக முடிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தவும், அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியத்தை ஒழுங்குபடுத்துவது தொடர்பான சட்ட விடயங்களை முறைப்படுத்தவும் தொழில் திணைக்களம் வரைவை மேலும் அடையாளம் கண்டு திருத்த முடிவு செய்துள்ளது.

- **2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனச் சட்டத்தில் திருத்தம்**

2023.03.07 திகதியிட்ட அமைச்சரவை முடிவு இலக்கம் அவி/23/0396/625/003 இன் படி, புதிய அரசாங்கத்தின் "வளமான நாடு, அழகான வாழ்க்கை" கொள்கை கட்டமைப்பிற்கு ஏற்பவும், காலத்துக்குப் பொருத்தமாக மேலும் பரிசீலிக்கப்பட்டு திருத்தப்படுவதற்காக சட்ட வரைஞர் தயாரித்த தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கான வரைவை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. அதன்படி, புதிய உலகளாவிய மற்றும் சந்தைத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் பட்டய நிபுணர்களை உருவாக்குவதற்கான தகுதிகளை வழங்கும் நிறுவகமாக மறுசீரமைக்கப்படுவதற்கும், டிப்ளோமாக்கள் மற்றும் பட்டங்களை வழங்குவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களைச் செய்வதற்கும் சட்டத்தில் புதிய உட்பிரிவுகளை இணைத்து ஒரு வரைவு சட்டமூலத்தை தயாரிக்க சட்ட வரைஞர் பணிக்கப்பட்டுள்ளார்.

- **1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை பணியமர்த்தும் சட்டத்தின் கீழ் குற்றங்களுக்குப் பொருந்தக்கூடிய தண்டப்பதண்டப்பண அபராதங்களில் திருத்தம்.**

கடல்சார் சேவை மற்றும் தொழில்துறை நிறுவனங்களில் சிறுவர்களைகளைப் பணியமர்த்தும், பிற வழிகளில் சிறுவர்களைப் வேலைக்கு அமர்த்தும் மற்றும் ஆபத்தான சிறுவர் தொழில்களில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் குற்றங்களுக்கு தற்போது தண்டப்பண அபராதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள அபராதம் ரூ. 10,000/- ஆகும். இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடுபவர்களை மேலும் அதைரியப்படுத்துவதற்காக, குறைந்தபட்ச அபராதம் ரூ. 100,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. குறைந்தபட்ச ஊதியத்தை ரூ. 100,000/- ஆக உயர்த்துவதற்கான தொடர்புடைய திருத்தங்களைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. தொடர்புடைய திருத்தங்கள் வரைவு அதிகாரியால் 31.12.2025 அன்று தயாரிக்கப்பட்டு அரசியலமைப்புடன் இணங்குகின்றமை தொடர்பில் மறுஆய்வுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

- **2022 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கம் கொண்ட தொழில்துறை பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை செயல்படுத்துவது குறித்த பரிந்துரைகளைப் பெறுதல்**

குற்றவியல் வழக்குகள் உட்பட பிற வழக்குகளுடன், பல தொழில் சட்டங்களின் அதிகார வரம்பைப் பயன்படுத்தும் நீதவான் நீதிமன்றங்களின் அதிக பணிச்சுமை காரணமாக, தொழில்துறை பிணக்குகள் தொடர்பான வழக்குகளைத் தீர்த்து முடிக்க நீண்ட காலம் எடுக்கும். எனவே, தொழில் சட்டங்கள் தொடர்பான நீதவான் நீதிமன்றங்களின் அதிகார வலுவை தொழில் நியாயசபைகளுக்கு மாற்றுவதற்காக 2022 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கம் கொண்ட தொழில்துறை பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் இயற்றப்பட்டது. நீதித்துறை சேவை ஆணைக்குழு உட்பட இந்தச் சட்டத்தை செயல்படுத்த நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

- **தென் கொரியாவின் சாங்ஷின் பல்கலைக்கழகத்தின் (Changshin University) தொழில் அமைச்சின் கீழ் உள்ள தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனம் ((NIOSH)) இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

தென் கொரியாவின் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனம் மற்றும் சாங்ஷின் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இலங்கை மாணவர்களை தொழில் பாதுகாப்பு, மொழித் திறன் மற்றும் தொழில் சார்ந்த நடைமுறை பயிற்சிக்காக அனுப்புவதற்காக வெளிநாட்டு பட்டம் வழங்கும் நிறுவனங்களுடன் ஒத்துழைப்பதற்கான தொடர்புடைய ஒப்பந்தம் வெளியுறவு அமைச்சின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக வெளியுறவு அமைச்சிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகள் உட்படுத்தப்பட்டு, இந்த ஒப்பந்தம் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட உள்ளது.

## 2.2 அபிவிருத்தி நடவடிக்கைகள்

- **தேசிய சமூகப் பாதுகாப்பு செயல் திட்டத்தின் (NSCAP) விருத்தி**

செப்டம்பர் 2025 இல் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய சமூகப் பாதுகாப்பு மூலோபாயத்தின் அடிப்படையில், இலங்கை அரசாங்கமும் சர்வதேச தொழிலாளர் அமைப்பும் (ILO) இணைந்து அக்டோபர் 29, 2025 அன்று ஒரு தேசிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைத் தயாரிக்கத் தொடங்கின. சமூகப் பாதுகாப்பு வழிகாட்டுதல் குழுவின் (SCC) ஆரம்பக் கலந்துரையாடல் 29.10.2025 அன்று பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சு, கிராம அபிவிருத்தி , சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் தொழில் அமைச்சின் கூட்டுப் பங்கேற்புடன் நடைபெற்றது. முழு நாட்டையும் உள்ளடக்கிய பல தொழில்நுட்ப செயலமர்வுகளை நடத்த முடிவு செய்யப்பட்டது, அதன் முதல் கூட்டம் 2025 நவம்பர் 25 அன்று கொழும்பில் நடைபெற்றது. அதன்படி, சமூகப் பாதுகாப்பு செயல் திட்டத்தின் முதற்கட்ட வரைவு தயாரிக்கப்பட்டது. மேலும், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் 2026 ஆம் ஆண்டின் முதல் மாதத்தில் குழந்தைப் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு மற்றும் ஊனமுற்றோர் பராமரிப்பு ஆகிய துறைகளுக்கான செயலமர்வுகள் தனித்தனியாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- **தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கையை ஆதரித்தல்**

தேசிய சிறுவர்கள் பாதுகாப்புக் கொள்கையில் ஐந்தாண்டு தேசிய செயல் திட்டத்தின் (2025-2029) படி இந்த அமைச்சும் திணைக்களமும் செய்ய வேண்டிய பணிகளை பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு செயற்படுத்தி மதிப்பாய்வு செய்து வருகிறது.

- **பொதுமக்கள் முறைப்பாடுகளை கையாளுதல் மற்றும் பின்தொடர்தல்**

2025 ஆம் ஆண்டில் தொழில் விடயதானத்தின் கீழ் மொத்தம் 1618 பொது முறைப்பாடுகளுக்கு பெறப்பட்டன, பெறப்பட்ட முறைப்பாடுகளுக்கு பின்வருமாறு.

**அட்டவணை 2.1** - பொது முறைப்பாடுகளுக்கு - சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனங்களின் அடிப்படையில்

| முறைப்பாடுகளை அனுப்பிய தரப்பினர் தரப்பினர் | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| சனாதிபதி செயலகம் | 13 |
| பிரதமர் அலுவலகம் | 35 |
| அமைச்சர் அலுவலகம் | 538 |
| பிரதி அமைச்சர் அலுவலகம் | 13 |
| பொது மக்கள் | 205 |
| பிற அமைச்சுகள் மற்றும் நிறுவனங்கள் | 5 |
| whatsapp மூலம் | 809 |
| மொத்தம் | 1,618 |

மேற்கண்ட முறைப்பாடுகளில், 1, 424 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளன. இவற்றில், 20 முறைப்பாடுகள் அமைச்சால் தீர்க்கப்பட்டுள்ளன, மேலும் 1,394 முறைப்பாடுகள் தொழிற் திணைக்கள தலையீடு மூலம் தீர்க்கப்பட்டுள்ளன. தொழில் நோக்கத்துடன் தொடர்பில்லாத 10 பொது கோரிக்கைகள் தொடர்புடைய அமைச்சுக்கள்/நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டன. நீதிமன்றத்தில் பரிசீலிக்கப்படும் முறைப்பாடுகள் மற்றும் மத்தியஸ்தம் மற்றும் விசாரணை மட்டத்தில் உள்ள முறைப்பாடுகள் உட்பட இன்னும் இறுதி தீர்வு நிலுவையில் உள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை, தொழில் திணைக்களத்துக்கு பரிந்துரைக்கப்படும் முறைப்பாடுகள் உட்பட இன்னும் இறுதி தீர்வு நிலுவையில் உள்ள முறைப்பாடுகள் 194 ஆகும்.

- **உள்ளக விவகாரப் பிரிவு**

ஊழல் முறைகேடுகளை விசாரித்தல், பொது முறைப்பாடுகளைப் பெறுதல் மற்றும் அவற்றை விசாரித்து நிவர்த்தி செய்தல் மற்றும் லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை சாத்தும் ஆணைக்குழுவுக்கு தொடர்புடைய அறிக்கைகளை அனுப்புதல் ஆகியவற்றின் மூலம் அமைச்சின் உள்ளக விவகாரப் பிரிவு தேசிய ஊழல் எதிர்ப்புக்கான இணக்கத்தை மதிப்பீடு செய்கிறது. அதன்படி, 6 முறைப்பாடுகள் உள்ளக விவகாரப் பிரிவிற்குக் கிடைத்தன, அவற்றில் 3 முறைப்பாடுகளுக்கான விசாரணை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, சனாதிபதி செயலகம் மற்றும் தொழில் ஆணையாளர் நாயகத்திற்கு பொருத்தமான முறையில் அனுப்பப்பட்டன. 3 பொருத்தமற்ற முறைப்பாடுகள் தொழில் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டன. அமைச்சின் அனைத்து ஊழியர்களுக்கும் ஒரு ஊக்குவிப்பு நிகழ்ச்சி 2025.10.02 அன்று அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. மேலும், உள்ளக விவகாரப் பிரிவின் செயற்பாடுகள் குறித்து அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சி 2025.11.07 அன்று நடைபெற்றது.

- **தகவல் கோரிக்கைகளுக்கு பதிலளித்தல்**

2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டில் 33 தகவல் கோரிக்கைகள் பெறப்பட்டன, மேலும் தொழில் விடயப்பரப்பு தொடர்பான 19 தகவல் கோரிக்கைகளுக்கு பதில்கள் வழங்கப்பட்டன. தொழில் விடயப்பரப்பு தொடர்பான 14 தகவல் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தகவல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## 2.3 வெளி உறவுகள்

### 2.3.1 சர்வதேச தொழிலாளர் தரநிர்ணய நிலைகளுடன் இணங்குதல்

- 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் சர்வதேச தொழிலாளர் அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட "வன்முறை மற்றும் துன்புறுத்தல் சமவாயத்தை " (C190- Violence and Harassment Convention) இலங்கை அங்கீகரிக்க அமைச்சரவை அனுமதி பெற்றுள்ளது.
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சமவாயத்துடன் (C 155) தொடர்புடைய சட்ட இடைவெளிகளைக் கண்டறிந்து தேவையான விதிகளை வரைவதற்கு ஒரு உள்ளக குழு நியமிக்கப்பட்டுள்ளது.
- ஊழியர்களுக்கான சமூகப் பாதுகாப்பு காப்பீட்டை விரிவுபடுத்துவதற்கும் மகப்பேறு சலுகைகளுக்கான காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உதவியுடன் மகப்பேறு சலுகைத் திட்டத்தில் ஒரு கணக்கியல் ஆய்வு (actuarial study) நடத்தப்பட்டுள்ளது. ஆய்விலிருந்து வரும் தகவல்கள் மற்றும் தற்போதைய சட்ட கட்டமைப்பு மற்றும் இருக்கும் இடைவெளிகளை பகுப்பாய்வு(Gap Analysis) செய்வதற்காக தொழில் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களின் பங்கேற்புடன் 24.10.2025 அன்று ஒரு சரிபார்ப்புப் செயலமர்வு (Validation Workshop) நடைபெற்றது, மேலும் தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில்தருநருடன் ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கு மேலும் கலந்துரையாடல்கள் நடந்து வருகின்றன.
- தேசிய தொழில் ஆலோசனைக் குழு 2025 ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப்பட்டது, அதன்படி, முதல் முறையாக, பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்காக, பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று (03) தொழிற்சங்கங்கள் சேர்க்கப்பட்டன.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பின் நிதி பங்களிப்புடன் 'கட்டாய உழைப்பு' (Forced Labour) என்ற கருப்பொருளின் அடிப்படையில் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி (TOT) திட்டம் நடத்தப்பட்டது, இதில் பத்து பொலிஸ் அதிகாரிகள், ஐந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு அதிகாரிகள் மற்றும் தொழில் திணைக்களத்தின் பதினைந்து அதிகாரிகள் பங்கேற்றனர். பயிற்சி பெற்ற அதிகாரிகளை வளவாளர்களாக பயன்படுத்தி, 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் கட்டாய உழைப்பு குறித்த இரண்டு விழிப்பூட்டல் செயலமர்வுகள் நடத்தப்பட்டன, மேலும் தொழில் திணைக்களம், இலங்கை பொலிஸ் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தும் எண்பது அதிகாரிகள் (முப்பது பொலிஸ் அதிகாரிகள், பத்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு அதிகாரிகள் மற்றும் தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த நாற்பது அதிகாரிகள்) பயிற்சி பெற்றனர்.
- சிறுவர் தொழிலாளர் உழைப்பு ஒழிப்புக்கான தேசிய வழிகாட்டுதல் குழுவின் (National Steering Committee on Elimination of Child Labour- NSCECL) இரண்டு (02) கூட்டங்களை நடத்தி, தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.
- தொழில் அமைச்சு, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன், 2026-2032 ஆண்டுகளுக்கான நாட்டின் கண்ணியமான/சீரிய வேலை நிகழ்ச்சித் திட்டத்தை (Decent Work Country Programme- DWCP) திட்டமிட்டுள்ளது, மேலும் 2025 ஆம் ஆண்டில் மூன்று ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பு, தொழில் அமைச்சுடன் இணைந்து, செப்டம்பர் 23, 2025 அன்று கொழும்பில் பிராந்திய வாழ்க்கை ஊதிய மாநாடு Regional Living Wage Conference என்ற செயலமர்வை ஏற்பாடு செய்தது, இதில் பதினாறு நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் எழுபது உறுப்பினர்கள் பங்கேற்றனர். இந்த மாநாட்டை நடத்துவதன் நோக்கம், பிராந்திய மட்டத்தில் ஊதியக் கொள்கைகள் மற்றும் வாழ்க்கை ஊதியத் திட்டங்கள் குறித்த அறிவைப் பரிமாறிக்கொள்வதும் மூலோபாய உரையாடலை ஊக்குவிப்பதும் ஆகும்.
- 2025 ஆம் ஆண்டில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் யாப்பு இலக்கம் 22 இன் கீழ் ஐந்து சமவாயங்களுக்கான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பின் யாப்பு இலக்கம் 19 இன் கீழ் அங்கீகரிக்கப்படாத சமவாயங்களுக்காக தயாரிக்கப்பட்ட அறிக்கை சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் ((NLAC)) ஏழு கூட்டங்களும் எட்டு துணைக் குழு கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக முக்கியமான சட்டத் திருத்தங்களைச் செய்வதற்கான முத்தரப்பு ஒப்பந்தங்கள் எட்டப்பட்டன, இதில் இரவில் பெண்களின் வேலைவாய்ப்பு தொடர்பான சட்ட விதிகளைத் தளர்த்துவது மற்றும் ஐந்து நாள் வேலை வாரத்தை நீட்டிப்பது ஆகியவை அடங்கும்.
- ஜெனீவாவில் நடைபெறும் வருடாந்தர சர்வதேச தொழிலாளர் மாநாட்டிற்காக முத்தரப்பு பிரதிநிதிகளின் பங்கேற்பு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல் மற்றும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வது. அதன்படி, 2025 ஆம் ஆண்டிற்கான சர்வதேச தொழிலாளர் மாநாடு 2025.06.02 முதல் 2025.06.13 வரை நடைபெற்றது, மேலும் இலங்கையை

பிரதிநிதித்துவப்படுத்தும் 6 தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில்தருநர் உட்பட 12 பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

## 2.4 திட்டமிடல் மற்றும் செயற்பாடுகள்

2025 ஆம் ஆண்டில், திட்டமிடல் பிரிவு பின்வரும் பணிகளை மேற்கொண்டுள்ளது.

- "வளமான நாடு, அழகான வாழ்க்கை அரசாங்கக் கொள்கை பிரகடனம் " செயல்படுத்தலின் கீழ் இந்த அமைச்சு தொடர்பான 2025 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தைத் தயாரித்து செயற்படுத்தியது. 2026 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, 2025-2029 காலகட்டத்திற்கான மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அது தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ளது.
- தொழில் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரையிலான முன்னேற்ற அறிக்கை, அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களின் தரவுகள் மற்றும் தகவல்களை உள்ளடக்கியதாக, தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- கௌரவ அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் செயலாளரின் தலைமையில், நிறுவனத் தலைவர் மற்றும் முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டங்களின் கீழ் 31.12.2025 வரை 15 கூட்டங்கள் மாதாந்த மற்றும் காலாண்டு அடிப்படையில் நடத்தப்பட்டுள்ளன.
- அமைச்சுடன் தொடர்புடைய நிறுவன பெறுபேற்று சட்டகத்தை (ORF) தயாரித்தல் மற்றும் முன்னேற்றம் குறித்து அறிக்கை அளித்தல். அதன் கீழ், 2025-2029 காலகட்டத்திற்கான முடிவு கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.
- சுனிசி மெஹேவரா (கண்ணிய/சீரிய பணி) திட்டத்தின் கீழ் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயல்திட்டங்களை செயல்படுத்துவதற்காக 2025 ஆம் ஆண்டுக்கு ரூ. 24 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த தொகையில், தொழில் திணைக்களம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம் மற்றும் தேசிய தொழில் கற்கைகள் நிறுவக மூலம் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயல் திட்டங்களுக்கு ரூ. 20.05 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

"சுனிசி மெஹேவரா" (கண்ணிய/சீரிய பணி) திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதியைப் பயன்படுத்தி தொழில் திணைக்களம் தன் பிரிவுகள் மூலம் திட்டங்களை செயற்படுத்தி வருகிறது.
அதன்படி,

- ❖ சமூக பொலிஸ் குழுக்கள் மூலம் சிறுவர் தொழிலாளர் உழைப்பை ஒழிக்கும் பொறுப்பை சமூகமயமாக்குவதற்காக, பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவு நாடு முழுவதும் 63 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியுள்ளது, இதில் 24,351 பயனாளிகள் பங்கேற்கின்றனர்.
- ❖ சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்புப் பிரிவு, சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக 411 தொழில்தருநர்கள் மற்றும் 9,552 ஊழியர்களின் பங்கேற்புடன் 240 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியுள்ளது. மேல் மாகாணத்தின் தோட்டப் பிரிவில் 1,000 வீட்டு அலகுகளை உள்ளடக்கிய சிறுவர் பெருந்தொழிலாளர் ஆய்வு-2025 அறிக்கையை புள்ளிவிவரப் பிரிவு நவம்பர் மாதத்தில் வெளியிட்டுள்ளது.
- ❖ சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பாதுகாப்பு கலாச்சாரத்தை நிறுவும் நோக்கில், தொழில்துறை பாதுகாப்புப் பிரிவு மற்றும் தொழில்சார் சுகாதாரப் பிரிவு ஆகியவை இணைந்து 1,720 பயனாளிகளை இலக்காகக் கொண்டு 41 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியுள்ளன.
- ❖ கொழும்பு மாவட்டத்தில் பணிபுரியும் 1,166 துப்புரவுத் தொழிலாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்த அறிவை மேம்படுத்துவதற்காக தொழில்சார் சுகாதாரப் பிரிவு 11 திட்டங்களை நடத்தியுள்ளது.
- ❖ தொழில் திணைக்களத்தில் பணிபுரியும் தொழில் அதிகாரிகள் மற்றும் தொழிலாளர் பிணக்குகளைக் கையாளும் அதிகாரிகளின் பிணக்குகளைத் தீர்ப்பதில் தேர்ச்சிகளை விருத்தி செய்ய 358 அதிகாரிகளை உள்ளடக்கிய 07 பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம், முறைசாரா துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு கண்ணியத்தை வழங்கும் நோக்கில், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் தொழில்நுட்பம், சந்தை அணுகல் மற்றும் நிதியுதவி ஆகிய துறைகளை உள்ளடக்கிய 16 நிகழ்ச்சித் திட்டங்களை 544 பயனாளிகளின் பங்கேற்புடன் நடத்தியுள்ளது.

தேயிலை, ரப்பர் மற்றும் ஆடை தொழிற்சாலைகள் மற்றும் தோட்ட நிறுவனங்களில் தொழில் தருநர் - பணியாளர் உறவுகளை வலுப்படுத்துதல் மற்றும் ஒரு நல்ல பணிச்சூழலை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம், "சுனிசி மெஹெவர" திட்டத்தின் கீழ் 15 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியுள்ளது. இதன் கீழ், ஹட்டன், மாத்தறை, கொக்கல மற்றும் பியகம ஆகிய பகுதிகளில் உள்ள தோட்ட மற்றும் ஆடைத் துறைகளில் 709 ஊழியர்களுக்கு அறிவு மற்றும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## 2.5 நிர்வாக மற்றும் தாபன விவகாரங்கள்

- 2025 ஆம் ஆண்டில், அமைச்சு 25 அமைச்சரவைப் பத்திரங்களை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து, அமைச்சரவை முடிவுகளைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளது.

- 1978 ஆம் ஆண்டு மூடப்பட்ட தேசிய நெசவுக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான துலிஹிரிய மற்றும் பூகோட நெசவுக் கூடங்களில் வேலை இழந்த ஊழியர்களுக்கு 2025 ஆம் ஆண்டு நட்டஈடு வழங்கப்பட்டது. அதன்படி, 1659 ஊழியர்களுக்கு ரூ. 82,991,475.00 நட்டஈடு வழங்கப்பட்டது. மேலும், மத்தேகம காபூல் லேஸ் (பிரைவேட்) லிமிடெட் மூடப்பட்டதால் வேலை இழந்த 05 ஊழியர்களுக்கு ரூ. 1,406,590.00 நட்டஈடு வழங்கப்பட்டது, அவர்களுக்கு இன்னும் நட்டஈடு கிடைக்கவில்லை.

- அமைச்சின் கீழ் உள்ள சுயநிதி நிறுவனங்களான சிரம வாசனா நிதியம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் மற்றும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் ஆகியவற்றின் சபை உறுப்பினர்களை நியமிப்பது 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, சிரம வாசனா நிதியத்திற்கு 8 உறுப்பினர்களையும், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்திற்கு 11 உறுப்பினர்களையும், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்திற்கு 15 உறுப்பினர்களையும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2** - பிற நிறுவன நடவடிக்கைகளின் முன்னேற்றம்

| | **செயற்பாடு** | **முன்னேற்றம்** |
|---|---|---|
| 01 | வாய்மொழி பாராளுமன்ற கேள்விகளுக்கான பதில்கள் | 12 |
| 02 | பொது மனுக்கள் குழுவிற்கு அனுப்பப்பட்ட அறிக்கைகள் | 2 |
| 03 | அமைச்சரவையின் அனுமதிக்காக வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல் | 2 |
| 04 | பாராளுமன்றத்திற்கு வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல் | 3 |
| 05 | அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மீதான அவதானிப்புகளை வழங்குதல் | 5 |

## 2.6 தொழில் திணைக்களம்

### 2.6.1 தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்புசார் மற்றும் சுகாதார மேம்பாடு

இலங்கையில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஏற்படும் அபாயங்களைக் குறைப்பதும், அவர்களின் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன் குறித்து நடவடிக்கை எடுப்பதும் தொழில் திணைக்களத்தின் முதன்மைப் பொறுப்பாகும். இந்த நோக்கத்தை அடைவதற்காக, 1942 ஆம் ஆண்டு 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி 2025 ஆம் ஆண்டில் அடையப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு.

#### 2.6.1.1 தொழிற்சாலை பதிவு

2025 ஆம் ஆண்டில் **2,339** தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டன, இது கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு வருடத்தில் பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச எண்ணிக்கையாகும். நாட்டில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை 31.12.2025 நிலவரப்படி 8,953 ஆக அதிகரித்துள்ளது.

**வரைபடம்** 2.1- 2021 முதல் 2025 வரை பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை




#### 2.6.1.2 தொழிற்சாலை கட்டிட வரைபடங்களுக்கு அனுமதி

தொழிற்சாலைகளுக்கான கட்டிடங்களைக் கட்டுவதற்கு முன், தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்திற்கு இணங்குவதை உறுதிசெய்ய தொழில் திணைக்களத்திடமிருந்து முன் ஆய்வு நடத்தப்பட்டு அனுமதி பெறப்பட வேண்டும். அதன்படி, **2025** ஆம் ஆண்டில் **204** தொழிற்சாலை கட்டிட வரைபடங்கள் ஆய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

**வரைபடம் 2.2**- 2021 முதல் 2025 ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் ஆய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலை கட்டிட வரைபடங்களின் எண்ணிக்கை




#### 2.6.1.3 தொழிற்சாலை பரிசோதிப்பு ஆய்வுகளை நடத்துதல்

தொழில் திணைக்களத்தின் தொழிற்சாலை பரிசோதிப்பு ஆய்வு பொறியாளர்கள் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின்படி செயல்படுகின்றனவா என்பதை உறுதிசெய்யவும், ஏதேனும் ஆபத்துகளைச் சரிசெய்வதற்கான ஆலோசனைகளை வழங்கவும் தொழிற்சாலைகளை பரிசோதிப்பு ஆய்வு செய்கிறார்கள். 2025 ஆம் ஆண்டில், 2,613 தொழிற்சாலைகள் பரிசோதிப்பு ஆய்வு செய்யப்பட்டு அறிவுறுத்தப்பட்டன. கூடுதலாக, தொழிற்சாலை சட்டத்தை மீறியதாக **3** வழக்குகள் தொடரப்பட்டன.

இந்த ஆய்வுகளுக்கு மேலதிகமாக, ஆராய்ச்சி அதிகாரிகள் தொழிற்சாலைகளை பரிசோதிப்பு ஆய்வு செய்து தொழிற்சாலைகளில் ஒளி அளவுகள் மற்றும் இரைச்சல் அளவுகள் போன்ற சுற்றுச்சூழல் அளவீடுகளை எடுத்து, தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கணக்காய்வுகளை நடத்துகின்றனர். அதன்படி, 2025 ஆம் ஆண்டில் **326** தொழிற்சாலைகள் மற்றும் 14 வாகன உமிழ்வு சோதனை மையங்களில் சுற்றுச்சூழல் அளவீடுகள் மற்றும் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கணக்காய்வுகள் நடத்தப்பட்டன. இதில் 27,727 ஊழியர்கள் அடங்குவர். இந்த தொழிற்சாலைகளின் பணிச்சூழலை மிகவும் சாதகமான நிலைக்குக் கொண்டுவர தேவையான பரிந்துரைகள் செய்யப்பட்டன, மேலும் வரும் ஆண்டுகளில் இது மீண்டும் பின்பற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வரைபடம்** 2.3 - 2021 முதல் 2025 வரை ஆண்டுதோறும் பரிசோதிப்பு ஆய்வு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை




#### 2.6.1.4 விபத்து புலனாய்வு விசாரணை

2025 ஆம் ஆண்டில் தொழில்புரியும் பணியிடங்களில் உயிரிழப்பு மற்றும் உயிரிழப்பு அல்லாத விபத்துகளில் ஒப்பீட்டளவில் குறைவு ஏற்பட்டுள்ளது, இது பணியிட பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். குறிப்பாக, முந்தைய ஐந்து ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது 2025 இல் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான உயிரிழப்பு விபத்துகள், 46 பதிவாகியுள்ளன.

மேலும், 2025 இல் பதிவான உயிரிழப்பு அல்லாத விபத்துகளின் எண்ணிக்கை 1,371 ஆகும், இது 2023 மற்றும் 2024 உடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க குறைவு.

**வரைபடம்** 2.4 - 2021 முதல் 2025 வரை பதிவான மற்றும் விசாரிக்கப்பட்ட விபத்துகளின் எண்ணிக்கை




#### 2.6.1.5 இருதரப்பு பாதுகாப்பு குழுக்களை நிறுவுதல்

நிறுவன மட்டத்தில் ஊழியர் மற்றும் தொழில்தருநர் இரு தரப்பினரையும் உறுப்பினர்களாகக் கொண்டு நிறுவப்பட்ட இருதரப்பு பாதுகாப்பு குழுக்கள், அவர்களின் தொழில்புரியும் பணியிடங்களில் விபத்துக்கள் மற்றும் தொழில்சார் நோய்களை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகளை முன்கூட்டியே கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க ஒரு வாய்ப்பை

வழங்குகின்றன. 2025 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பாதுகாப்பு குழுக்களின் எண்ணிக்கை 78. அதன்படி, 2025.12.31 நிலவரப்படி செயற்படும் இருதரப்பு பாதுகாப்பு குழுக்களின் மொத்த எண்ணிக்கை 955.

#### 2.6.1.6 அதி ஆபத்துள்ள இயந்திரங்களை பரிசோதிப்பு ஆய்வு செய்தல்

தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளில் கூறப்பட்டுள்ளபடி, அவ்வப்போது பரிசோதிப்பு செய்யப்பட வேண்டிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் பெறப்பட்ட ஆய்வு அறிக்கைகள் ஊழியர்களின் வேண்டுகோளின் பேரில் ஆய்வு செய்யப்படுகின்றன, மேலும் ஆய்வு அறிக்கைகள் தொழில் திணைக்களத்துக்கு வெளியே அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளால் தொழில் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. அதன்படி, 2025 ஆம் ஆண்டில் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளால் பரிசோதிப்பு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அதிக ஆபத்துள்ள இயந்திர பரிசோதிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை 11,809 ஆகும்.

**வரைபடம் 2.5 -** 2025 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளால் பரிசோதிப்பு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அதி ஆபத்துள்ள இயந்திர பரிசோதிப்பு ஆய்வு அறிக்கைகளின் எண்ணிக்கையின் வகைப்பாடு.




### 2.6.2 ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பு

இலங்கையில் தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறை ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பிற்கான பிரதான நிதியான ஊழியர் சேமலாப நிதியம், 2025 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது. அதன்படி, 31.12.2025 நிலவரப்படி, நிதியத்தில் பதிவுசெய்யப்பட்ட செயலில் உள்ள தொழில்தருநர்களின் எண்ணிக்கை 92,000 ஐத் தாண்டியது, மேலும் நிதியின் செயலில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 2.9 மில்லியனாக இருந்தது. 31.12.2025 நிலவரப்படி, நிதியின் மொத்த மதிப்பு ரூ. 5 டிரில்லியன் என்ற மிகப்பெரிய மதிப்பிற்கு அதிகரிக்க முடிந்துள்ளது.

**வரைபடம் 2.6 -** 2021 முதல் 2025 வரை ஊழியர் சேமலாப நிதிய வளர்ச்சி



#### 2.6.2.1 ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் உறுப்பினர்கள் மற்றும் தொழில்தருநரின் பதிவு

அரசாங்க கொள்கை அறிக்கையின்படி, டிஜிட்டல் நிர்வாகத்திற்கான மின்னணு சேவைகளாக (e-Service) ஊழியர் சேமலாப வைப்பு நிதியத்தால் வழங்கப்படும் சேவைகளை வழங்குவதற்கான முதல் படி 2025 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அதன்படி, இயைணவழி (ஆன்லைன் முறை) மூலம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தொழில்தருநர் மற்றும் உறுப்பினர்களைப் பதிவு செய்யும் செயல்முறை 2025.12.29 அன்று தொடங்கப்பட்டது. இது வாடிக்கையாளர்கள் தொழில் திணைக்களத்தின் அலுவலகங்களுக்குச் செல்லாமல் இயைணவழி முறை மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து தொடர்புடைய பதிவு நடவடிக்கைகளை செய்து முடிக்கும் வசதியை வழங்கும். 2025 ஆம் ஆண்டில், 10,611 புதிய நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்துள்ளன.

#### 2.6.2.2 ஒருங்கிணைந்த தரவு அமைப்புகளைத் தயாரித்தல் மற்றும் கோப்புகளை மின்னணு முறையில் சேமித்தல்

இலங்கை மத்திய வங்கியும் தொழில் திணைக்களமும் ஊழியர் சேமலாப நிதி தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள இரண்டு தரவு அமைப்புகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் சிரமங்களுக்கு ஒரு நிலையான தீர்வாக ஒருங்கிணைந்த தரவு அமைப்பைத் தயாரிக்க ஒப்புக்கொண்டன. அதன்படி, ஒருங்கிணைந்த தரவு அமைப்பைத் தயாரிப்பதற்காக 2025 ஆம் ஆண்டில் ஒரு நிபுணத்துவ ஆலோசகரின் சேவைகள் பெறப்பட்டன. அவரது பரிந்துரைகளின் அடிப்படையில், அமைப்பைத் தயாரிப்பதற்கான ஒரு நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் செயல்முறை தொடங்கப்பட்டது, மேலும் அதன் மேலும் நடவடிக்கைகள் 2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன.

மேலும், ஊழியர் சேமலாப நிதி தொடர்பான கோப்புகளை மின்னணு முறையில் சேமிப்பதற்கான கோப்புகளை ஸ்கேன் செய்தல் மற்றும் மின்னணு காப்பகத்தின் தேவை அடையாளம் காணப்பட்டது. அதன்படி, அதற்கான தேவையான மேலும் நடவடிக்கைகள் **2026** ஆம் ஆண்டில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.6.3 ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான முன்னேற்றம்

#### 2.6.3.1 ஊழியர் சேமலாப நிதிய நன்மை அனுகூலங்களை செலுத்துதல்

2025 ஆம் ஆண்டில்இ ஊழியர் சேமலாப நிதிய நன்மை அனுகூலங்களுக்கு விண்ணப்பித்த உறுப்பினர்களுக்கு அனுகூலங்களை வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு 142,232 தீர்மானிப்பு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

**வரைபடம் 2.7** - 2025.01.01 முதல் 2025.12.31 வரை ஊழியர் சேமலாப அனுகூலங்களை வழங்குவதற்காக அனுப்பப்பட்ட தீர்மானக் கடிதங்களின் எண்ணிக்கை



**வரைபடம் 2.8** - ஊழியர் சேமலாப நிதிய அனுகூலங்களை செலுத்துவதற்கான தீர்மானக் கடிதங்களை அனுப்ப எடுக்கப்பட்ட நேரம் - 2025.01.01 முதல் 2025.12.31 வரை




அதன்படி, 2025 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதி **அனுகூலங்களை** செலுத்துவதற்கான முடிவு கடிதங்களை அனுப்புவதற்கு எடுக்கப்பட்ட நேரத்தின் செயல்திறனை இந்த வரைபடம் காட்டுகிறது, மேலும் 76% விண்ணப்பங்களுக்கு, முடிவு கடிதங்களை அனுப்ப எடுக்கப்பட்ட நேரம் இரண்டு வாரங்களுக்கும் குறைவாகவே இருந்தது.

#### 2.6.3.2 பங்களிப்புகளை செலுத்தத் தவறிய தொழில்தருநர்களிடமிருந்து பங்களிப்புகளை அறவிட அறிவிப்புகளை அனுப்புதல்

பங்களிப்புகளை செலுத்தத் தவறிய தொழில் தருநர்களிடமிருந்து பணத்தை அறவிட திணைக்கம் முதல் அறிவிப்புகள் மற்றும் இறுதி அறிவிப்புகளை அனுப்புகிறது, மேலும் எந்த பதிலும் இல்லை என்றால், பங்களிப்புகள் மற்றும் மேலதிக கட்டணங்களை அறவிட சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**அட்டவணை** 2.3 – 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் அறிவிப்புகளை அனுப்புவதில் முன்னேற்றம்

| ஆண்டு | அனுப்பப்பட்ட முதல் அறிவிப்புகளின் எண்ணிக்கை | முதல் அறிவிப்புகள் தொடர்பாக அறவிடப்பட்ட தொகை ரூ. | அனுப்பப்பட்ட கடைசி அறிவிப்புகளின் எண்ணிக்கை | இறுதி அறிவிப்புகள் தொடர்பாக அறவிடப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 2024 | 14,412 | 7,247 | 7,040 | 391 |
| 2025 | 19,603 | 9,690 | 10,144 | 5,347 |

### 2.6.4 தொழில்துறை இணைப்பு

#### 2.6.4.1. தொழில்தருநர் மற்றும் பணியாளரின் இரு தரப்பினருக்கும் இடையே ஒரு உரையாடலைப் பேணுதல்

தனியார் துறை மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களில் தொழில்தருநர் மற்றும் பணியாளரின் இரு தரப்பினருக்கும் இடையே தொழில்துறை அமைதியை உறுதி செய்யும் ஒரு பணிச்சூழலை உருவாக்குவதற்காகஇ அந்தத் துறைகளின் நிறுவனங்களில் தொழில் தருநர் மற்றும் பணியாளரின் இரு தரப்பினருக்கும் சமூக உரையாடல், பணியிட ஒத்துழைப்பு மற்றும் தொழில் சட்டங்கள் குறித்து அறிவூட்டுவதற்கான செயல் திட்டங்களைத் திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்தியது.

மேலும், பங்குதாரர் தலையீடுகள் மூலம் தொழில்துறை பிணக்குகள் மற்றும் பிரச்சினைகளை ஜனநாயக ரீதியாகத் தீர்ப்பதற்கான ஒரு பொறிமுறையை செயல்படுத்தும் பொறுப்பு அரசாங்கக் கொள்கை அறிக்கையின் மூலம் தொழில் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி, **2025** ஆம் ஆண்டில் தொழில்தருநர் மற்றும் பணியாளரின் இரு தரப்பினருக்கும் சமூக உரையாடல், பணியிட ஒத்துழைப்பு மற்றும் தொழில் சட்டங்கள் குறித்து அறிவூட்டுவதற்காக தொடர்ச்சியான நிறுவன அளவிலான திட்டங்களைத் திணைக்களம் செயற்படுத்தியது. இதன் கீழ், **2025** ஆம் ஆண்டில் 240 திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன, மேலும் 9,552 ஊழியர்கள் மற்றும் 411 தொழில் தருநர்கள் உட்பட மொத்தம் **9,963** பயனாளிகளுக்கு அறிவூட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

#### 2.6.4.2 முதலாளிக்கும் ஊழியருக்கும் இடையே உரையாடலைப் பேணுதல்

நியதி சட்டப்பூர்வ உரிமைகள் மீறல்கள் தொடர்பான புமுறைப்பாடுகளைகளைத் தீர்ப்பதுவும் மற்றும் தொழில்துறை பிணக்குகளைகளைத் தீர்ப்பதுவும் தொழில் திணைக்களம் மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம், ஊழியர்கள் அல்லது தொழிற்சங்கங்களால் செய்யப்படும் நியதிச்சட்டப்பூர்வ உரிமைகள் மீறல்கள் மற்றும் தொழில்துறை பிணக்குகள் தொடர்பான புகார்களைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தன. இதேபோல், முறைப்பாடு விசாரணையிலோ அல்லது நிறுவனத்தின் விசாரணையிலோ திருப்தி அடையாத ஒருவரால் மறு விசாரணை நடத்துமாறு தொழில் ஆணையாளர் நாயகத்திடம் செய்யப்பட்ட கோரிக்கைகளும் தேவைப்பட்டால் மேலும் விசாரணைக்கு பரிந்துரைக்கப்பட்டன. அதன்படி, 2025.01.01 நிலவரப்படி நிலுவையில் உள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 11,071 ஆகும், மேலும் 2025 ஆம் ஆண்டிற்கு 16,762 முறைப்பாடுகள் பெறப்பட்டன. இவற்றில், 2025 ஆம் ஆண்டில் 18,708 முறைப்பாடுகள்கள் தீர்க்கப்பட்டன.

தொழில் திணைக்களத்துக்கு முறைப்பாடு அளிக்க விரும்பும் ஒருவர் https://cms.labourdept.gov.lk/ என்ற மின்னணு சேவை மூலம் தனது முறைப்பாட்டை இணையவழியில் தொழில் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி, இந்த முறைப்பாட்டு முகாமைத்துவ அமைப்பின் மேலும் விருந்தியடைந்து வருகிறது. தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான முறைப்பாடுகளை உள்ளிடுவதற்கான தனி தொகுதி 2025 இல் உருவாக்கப்பட்டது, இப்போது இந்த அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது, மேலும் வழக்கு தொடர்பான தொகுதியும் உருவாக்கப்பட்டு வருகிறது. வாடிக்கையாளரின் தேவைகளுக்கு ஏற்ப இந்த அமைப்பு மேலும் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

#### 2.6.4.3 நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளை நடத்துதல்

பிராந்திய அலுவலகங்கள் அல்லது தலைமை அலுவலகத்தின் தொழில்துறை உறவுகள் பிரிவின் முயற்சிகள் இருந்தபோதிலும் தீர்க்க முடியாத தொழில்துறை பிணக்குகள், நடுத்தீர்ப்பாயத்திற்கு அல்லது தொழில்துறை நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்படுகின்றன. 2024 ஆம் ஆண்டில், 219 பிணக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன, அவற்றில் 111 பிணக்குகளின் விசாரணை 2024 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது. 2025.01.01 முதல் 2025.12.31 வரையிலான காலகட்டத்தில், நடுத்தீர்ப்பாயத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட 81 பிணக்குகள் உட்பட 216 பிணக்குகள் தீர்க்கப்பட இருந்தன. இவற்றில், 103 பிணக்குகளின் விசாரணை முடிக்கப்பட்டு 80 நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன, அதே நேரத்தில் 23 நிதிக்கொடைகள் எதிர்காலத்தில் வழங்கப்பட உள்ளன. அதன்படி, 31.12.2025 நிலவரப்படி, 113 பிணக்குகள் நடுத்தீர்ப்பாயத்தில் நிலுவையில் இருந்தன.

#### 2.6.4.4 தொழில் தருநர்கள் மற்றும் ஊழியர்கள் இருவரும் கூட்டு ஒப்பந்தங்களில் ஈடுபட ஊக்குவித்தல்

கூட்டு ஒப்பந்தங்களில் நுழைவது தொழில் சட்டங்களால் வழங்கப்பட்டதை விட ஊழியர்களுக்கு அதிக சலுகைகளை வழங்குகிறது, மேலும் ஊழியர்களிடமிருந்து மிகவும் பயனுள்ள சேவையைப் பெறுவதற்கு தொழில் தருநர்கள் பொருத்தமான நிலைமைகளை அடைய உதவுகிறது.

சமூக உரையாடல் தொழில் தருநர்கள் மற்றும் ஊழியர்களால் அத்தகைய கூட்டு ஒப்பந்தங்களில் நுழைவதை ஊக்குவிக்கிறது. 01.01.2025 முதல் 31.12.2025 வரையிலான காலகட்டத்தில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட புதிய கூட்டு ஒப்பந்தம் உட்பட, 31.12.2025 நிலவரப்படி நடைமுறையில் உள்ள கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை **226** ஆகும்.

#### 2.6.4.5 கள ஆய்வுகளை நடத்துதல்

தொழில்தருநர்கள் ஊழியர்களை பணியமர்த்துவதற்கான விதிகளை முறையாகப் பின்பற்றுகிறார்களா என்பதைச் சரிபார்க்க 2025.01.01 முதல் 2025.12.31 வரை நடத்தப்பட்ட கள ஆய்வுகளின் தகவல்கள் பின்வருமாறு.

**அட்டவணை 2.4 -** 2025.01.01 முதல் 2025.12.31 வரை நடத்தப்பட்ட கள சோதனைகள் பற்றிய தகவல் மேலும், கள ஆய்வுகளுக்குப் பிறகு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு அறிக்கைகளை டிஜிட்டல்

| | |
|---|---|
| மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களுடன் இணைக்கப்பட்ட தொழில் அதிகாரிகளால் நடத்தப்பட்ட தொழிலாளர் ஆய்வுகளின் எண்ணிக்கை | 93,153 |
| இரவு வேலைகளில் பெண்களை பணியமர்த்துவது தொடர்பான ஆய்வுகளின் எண்ணிக்கை | 24 |
| சிறுவர்களை பணியமர்த்துவது தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாடுகளின் பேரில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை | 77 |
| மீன்பிடி மற்றும் தோட்டத் துறைகளில் சிறுவர் தொழிலாளர் ஆபத்தில் உள்ள சிறுவர்களை அடையாளம் காண இலக்கு வைக்கப்பட்ட ஆபத்து பகுதிகளில் விசேட கள ஆய்வுகளின் எண்ணிக்கை | 35 |
| வீட்டுத் தங்குமிடங்கள் மற்றும் விருந்தோம்பல் சேவை மையங்கள் உட்பட சுற்றுலாத் துறையை உள்ளடக்கிய விசேட குழு ஆய்வுகளின் எண்ணிக்கை | 75 |
| தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான ஆய்வுகளின் எண்ணிக்கை | 2,953 |
| விசேட புலனாய்வுப் பிரிவால் நடத்தப்பட்ட விசேட புலனாய்வுகளின் எண்ணிக்கை | 33 |
| மொத்தம் | 96,350 |

விண்ணப்பம் மூலம் சமர்ப்பிக்க தொழில் அதிகாரிகள் மற்றும் மாவட்ட தொழிற்சாலை ஆய்வாளர் பொறியாளர்களுக்கு வசதியை வழங்குவதற்கான மென்பொருள் விருத்தி நடவடிக்கைகளின் ஆரம்ப நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

#### 2.6.4.6 தொழிற்சங்கங்களின் பதிவு

ஒவ்வொரு தொழிற்சங்கமும் தொழில் திணைக்களத்தின் தொழிற்சங்க பதிவாளரிடம் பதிவு செய்யப்பட வேண்டியது தொழிற்சங்க கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டாயத் தேவையாகும். அதன்படி, 2025.01.01 முதல் 2025.12.31 வரை திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள்/சம்மேளனங்களின் எண்ணிக்கை 99 ஆகும். அந்தக் காலகட்டத்தில், 153 தொழிற்சங்கங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அதன்படி, 2025.12.31 நிலவரப்படி செல்லுபடியாகும் தொழிற்சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 2,088 ஆகும்.

#### 2.6.4.7 வேலைநிறுத்தங்களைத் தீர்ப்பதற்கான தலையீடுகள்

தொழில்துறை பிணக்கு வேலைநிறுத்தமாக மாறக்கூடிய சூழ்நிலைகள் காணப்பட்டவுடன், அந்த சூழ்நிலையைத் தடுக்க திணைக்களம் தலையிடும், மேலும் வேலைநிறுத்தம் ஏற்பட்டால், அந்த வேலைநிறுத்தம் தொடர்பான பிணக்கைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். 2025.01.01 முதல் 2025.12.31 வரை பதிவான வேலைநிறுத்தங்கள் குறித்த தகவல்கள் பின்வருமாறு.

**அட்டவணை 2.5 -** பதிவான வேலைநிறுத்தங்கள் குறித்த தரவு - 2025.01.01 முதல் 2025.12.31 வரை

| களம் | பதிவான வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கேற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தோட்டத்துறை | 6 | 410 | 1,191 |
| நிர்மாணத் துறை | 3 | 420 | 2,206 |
| உற்பத்தித்துறை | 10 | 4,879 | 11,294 |
| மொத்தம் | 19 | 5,709 | 14,691 |

அதன்படி, 2025 ஆம் ஆண்டில் இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை 14,691 ஆகும், இது 2024 ஆம் ஆண்டில் இழந்த மனித நாட்களின் எண்ணிக்கையான 28,429 உடன் ஒப்பிடும்போது 13,738 குறைவு.

#### 2.6.4.8 வலய மற்றும் மாவட்ட ஆலோசனைக் குழுக்களை நடத்துதல்

அரசு, தொழில்தருநர் மற்றும் ஊழியர் அமைப்புகளுக்கு இடையே சமூக உரையாடலை மிகவும் தீவிரமாக ஊக்குவிக்கும் நோக்கத்துடன்இ 2025 ஆம் ஆண்டில் தேசிய தொழில் ஆலோசனைக் குழுவின் பிராந்திய அளவிலான கட்டமைப்பாக 11 வலய ஆலோசனைக் குழுக்கள் மற்றும் 40 மாவட்ட ஆலோசனைக் குழுக்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. இந்த ஆலோசனைக் குழுக்களில் 1,959 பங்குதாரர்கள் தீவிரமாக பங்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆலோசனைக் குழுக்கள் தேசிய அளவில் கவனம் செலுத்த வேண்டிய பிரச்சினைகள் இருந்தால், அந்த பிரச்சினைகளை தேசிய தொழில் ஆலோசனைக் குழுவிடம் (NLAC) முன்வைக்க ஒரு வழிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

#### 2.6.4.9 சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்

சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பு ஊக்குவிப்புப் பிரிவால் நடத்தப்படும் திட்டங்களை நாடளாவிய அளவில் மிகவும் பயனுள்ளதாக மாற்றுவதற்காக, பிராந்திய தொழில் அலுவலக மட்டத்தில் திணைக்கள அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் இனங் காணப்பட்டது.

சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பு பற்றிய விடய அறிவை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், அதிகாரிகளின் முன்வைப்புத் திறன்கள் உள்ளிட்ட மென் திறன்களை வளர்ப்பதே இந்த நிகழ்ச்சித் திட்டத் தொடரின் முக்கிய குறிக்கோளாகும். அதன்படி, 2025 ஆம் ஆண்டில் பொருத்தமான அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் பயிற்சியாளர்களுக்கான பயிற்சித் திட்டம் இரண்டு கட்டங்களாக வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்தச் செயல்முறையின் மூலம், பயிற்சியாளர்களாகச் செயல்படக்கூடிய 56 அதிகாரிகளைக் கொண்ட பயிற்சிக் குழுவை உருவாக்க முடிந்தது. இந்தப் பயிற்சியாளர்களை வளவாளர்களாக பயன்படுத்தி 2026 ஆம் ஆண்டு முதல் பிராந்திய மட்டத்தில் நிறுவன விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.6.5 ஊழியர்களின் வேலைவாய்ப்பு தொடர்பான உரிமைகளைப் பாதுகாக்க சட்டப் பாதுகாப்பு

ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க திணைக்களம் பல செயல்களைச் செயல்படுத்துகிறது. அதன்படி, இந்தச் சட்டங்களை மீறும் தொழில் தருநர்கள் மீது திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுத்து அதன் மூலம் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறது. 2025 ஆம் ஆண்டில் திணைக்களத்தால் நீதவான் நீதிமன்றங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட வழக்குகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு:

**வரைபடம் 2.9** – நீதவான் நீதிமன்றங்களில் குறிப்பிடப்பட்டு முடிக்கப்பட்ட வழக்குகள் - 2025.01.01 முதல் 2025.12.31 வரை




குறிப்பு - மேலே உள்ள அட்டவணை பிராந்திய தொழில் அலுவலகங்களால் எடுக்கப்பட்ட நீதித்துறை நடவடிக்கைகள் குறித்த தகவல்களை வழங்குகிறது.

**அட்டவணை** 2.6 - பிற நீதிமன்றங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த 2025 ஆம் ஆண்டின் முன்னேற்றம் பின்வருமாறு.

| **நீதித்துறை** | 2025.01.01 **நிலவரப்படி நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை** | 2025.01.01 **முதல்** 2025.12.31 **வரை சேர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை** | 31.12.2025 **நிலவரப்படி முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை** | 31.12.2025 **நிலவரப்படி மீதமுள்ள வழக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| மீயுயர் நீதிமன்றம் | 143 | 30 | 4 | 169 |
| மேல்முறையீட்டு நீதிமன்றம் | 440 | 30 | 52 | 418 |
| உயர் நீதிமன்றம் | 104 | 18 | 18 | 104 |
| வணிக உயர் நீதிமன்றம் | 137 | 1 | 1 | 137 |
| மொத்தம் | 824 | 79 | 75 | 828 |

### 2.6.6 தொழில் தர நியமங்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்

தனியார் துறை ஊழியர்களின் ஊதியம் மற்றும் சேவை நிலைமைகளை புதுப்பித்தல் மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது திணைக்களத்தின் முக்கியப் பணியாகும். அதன்படி, 2025.01.01 முதல் 2025.12.31 வரை விடயப்பிரிவு தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**• வாரத்தில் 05 நாள் வேலை செய்தல் திட்டத்திற்கான அனுமதி**

வாரத்தில் 05 நாள் வேலை செய்தல் திட்டத்திற்கான அனுமதி 2025 ஆம் ஆண்டில் தொழில் தருநர்களிடமிருந்து 331 கோரிக்கைகள் பெறப்பட்டன, அவற்றில் 294 கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டன, மேலும் தொடர்புடைய நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமல் பெறப்பட்ட 37 கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

**• சம்பள சபை கட்டளைச் சட்டம் மற்றும் கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் கீழ் ஊதியங்களிலிருந்து பிடித்தம் செய்வதற்கான கோரிக்கைகளுக்கு அனுமதி அளித்தல்**

2025.01.01 முதல் 2025.12.31 வரை சம்பள சபை கட்டளைச் சட்டம் மற்றும் கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் கீழ் ஊதியங்களிலிருந்து பிடித்தம் செய்வதற்கான 229 கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன, மேலும் முந்தைய ஆண்டில் பெறப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள கோரிக்கைகள் உட்பட 190 கோரிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. **69** கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

**• கட்டளைகள் மற்றும் சட்டங்கள் தொடர்பாக தொழில்தருநர் மற்றும் ஊழியர்களால் செய்யப்பட்ட விசாரணைகளுக்கு தெளிவுபடுத்தல்களை வழங்குதல்**

2025.01.01 முதல் 2025.12.31 வரை கட்டளைகள் மற்றும் சட்டங்கள் தொடர்பாக தொழில்தருநர்கள் மற்றும் ஊழியர்களால் 111 விசாரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன. 2024 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 70 விசாரணைகளுடன் ஒப்பிடும்போது இது குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும். இதில், 109 கோரிக்கைகளுக்கு தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்டன, மீதமுள்ள விசாரணைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**வரைபடம் 2.10** – 2022 முதல் 2025 வரை பெறப்பட்ட சம்பளக் குறைப்புகளுக்கான கோரிக்கைகள் மற்றும் வழங்கப்பட்ட அனுமதிகள்



**வரைபடம் 2.11 -** 2022 முதல் 2025 வரையிலான 5 நாள் வேலை வாரத்திற்கான பெறப்பட்ட கோரிக்கைகள் மற்றும் வழங்கப்பட்ட அனுமதிகள்.




சம்பள சபைகள் தொடர்பான செயற்பாடுகள்

**2025** ஆம் ஆண்டில் கூட்டப்பட்டு செயல்பாட்டில் உள்ள சம்பள சபைகளின் பட்டியல் பின்வருமாறு.

- தேயிலை வளர்ப்பு மற்றும் பதப்படுத்தும் தொழில்.
- ரப்பர் வளர்ப்பு மற்றும் மூல ரப்பர் பதப்படுத்தும் தொழில்.
- தென்னை வளர்ப்பு தொழில்பாதுகாப்பு சேவைகள் தொழில்
- துப்புரவு சேவைகள் தொழில்
- ஆடை உற்பத்தி தொழில்
- புடவை உற்பத்தி தொழில்

### 2.6.7 வேலை செய்யும் பெண்கள் மற்றும் இளம் ஆட்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்

தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் பெண் பணியாளர்களின் தீவிர பங்கேற்பை உறுதி செய்வதற்கு, அவர்களின் தொழில்முறை உரிமைகளைப் பாதுகாப்பது தொழில் திணைக்களத்தின் முதன்மைப் பொறுப்பாகும், மேலும் தொழில் திணைக்களம் இந்த நோக்கத்திற்காக உறுதிபூண்டுள்ளது.

இதன் கீழ்,இரவு வேலையில் பெண்களை பணியமர்த்துவதற்கு அனுமதி வழங்கவும், இரவு வேலையில் பெண்களை பணியமர்த்துவது தொடர்பான சேவை நிபந்தனைகளை மீறுவது தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாடுகளைகளை விசாரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின்படி, 2025.01.01 முதல் 2025.12.31 வரை இரவுப் பணிகளில் பெண்களைப் பணியமர்த்துவதற்கு 757 அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இரவுப் பணிகளில் பெண்களைப் பணியமர்த்துவது தொடர்பான சேவை நிபந்தனைகளை மீறுவது தொடர்பாக அந்தக் காலகட்டத்தில் 04 முறைப்பாடுகள் பெறப்பட்டன, அவற்றில் 02 முறைப்பாடுகள்கள் தீர்க்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 02 முறைப்பாடுகள் குறித்து விசாரணைகள் நடந்து வருகின்றன.

மகப்பேறு சலுகை கட்டளைச் சட்டத்தின் விதிகளை மீறுவது தொடர்பாக 06 முறைப்பாடுகள் 2025 இல் பெறப்பட்டன, மேலும் ஒரு முறைப்பாடு முடிக்கப்பட்டுள்ளது, மீதமுள்ள முறைப்பாடுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 2.6.8 சிறுவர் தொழிலாளர் முறையை இல்லாது ஒழித்தல்

இலங்கையிலிருந்து சிறுவர் தொழிலாளர் முறையை முற்றிலுமாக இல்லாது ஒழிப்பது தொழில் திணைக்களத்தின் முதன்மைப் பணியாகும், மேலும் அந்த தேசிய இலக்கை அடைவதற்கு தொழில் திணைக்கம் தொடர்ந்து உறுதிபூண்டுள்ளது. இது தொடர்பாக, 2025 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- **சிறுவர் தொழிலாளர் தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாடுகள் குறித்து விசாரணைகளை நடத்துதல்**

2025 ஆம் ஆண்டில், சிறுவர் தொழிலாளர் தொடர்பாக 79 முறைப்பாடுகள் பெறப்பட்டன, மேலும் 74 முறைப்பாடுகள் முந்தைய ஆண்டில் பெறப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள முறைப்பாடுகளுடன் சேர்த்து தீர்க்கப்பட்டன. இவற்றில், சிறுவர் தொழிலாளர் இருப்பதை வெளிப்படுத்திய 08 முறைப்பாடுகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**வரைபடம்** 2.12 - 2022 முதல் 2025 ஆம் ஆண்டு வரை சிறுவர் தொழிலாளர் தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாடுகள் குறித்து விசாரணைகளை நடத்துதல்




- **இலங்கையில் சிறுவர் தொழிலாளர் முறையை ஒழிப்பதை நோக்கிச் செயல்படுதல்**

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் சமூக பொலிஸ் குழுக்கள் மூலம் சிறுவர் தொழிலாளர் முறையை இல்லாது ஒழித்தல் மற்றும் பிரஜைப் பொறுப்பை அடிமட்ட மட்டத்திற்கு எடுத்துச் செல்வது மிகவும் நடைமுறைக்கு ஏற்றதாக அடையாளம் காணப்பட்டது. அதன்படி, 2024 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த நடவடிக்கை, 2025 ஆம் ஆண்டில் தொடர்ந்தது.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 45 பொலிஸ் பிரிவுகளில், 2024 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தில் 4 பிரிவுகளில் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி அமர்வுகள் நடத்தப்பட்டன. 2025 ஆம் ஆண்டில் இலங்கையை உள்ளடக்கிய 41 பொலிஸ் பிரிவுகளுக்கு நடத்த திட்டமிடப்பட்ட பயிற்சியாளர்களுக்கான பயிற்சி அமர்வுகள், தொழில் திணைக்களத்தின் உதவியுடன், 11 வலய அலுவலகங்களையும் உள்ளடக்கியதாக இலங்கை பொலிஸ் திணைக்களத்தால் வெற்றிகரமாக முடிக்கப்பட்டன.

மேலும், இதுவரை சிறுவர் தொழிலாளர் முறையை இல்லாது ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை மதிப்பாய்வு செய்து வழங்கும் திட்டம் ஜூன் 20, 2025 அன்று தலைமை அலுவலக வளாகத்தில் கௌரவ சபாநாயகரின் தலைமையில் நடைபெற்றது. தொழில் திணைக்களம், இலங்கை பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் மற்றும் தேசிய வழிகாட்டுதல் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தொடர்புடைய தரப்பினரின் ஆதரவுடன், தொழில் அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் இதில் பங்கேற்றனர். இதில் கிட்டத்தட்ட 240 பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் மற்றும் தொழில் திணைக்கள அதிகாரிகள் பங்கேற்றனர்.

- **மீன்பிடி மற்றும் தோட்டத் துறைகளில் சிறுவர்த் தொழிலாளர் அபாயத்தில் உள்ள சிறுவர்களைகளை அடையாளம் காண இலக்கு வைக்கப்பட்ட ஆபத்து பகுதிகளில் விசேட கள ஆய்வுகள் / விழிப்பூட்டல் திட்டங்களை நடத்துதல்**

2025 ஆம் ஆண்டில் மீன்பிடி மற்றும் தோட்டத் துறைகளில் 35 விசேட கள ஆய்வுகள் மற்றும் விழிப்பூட்டல் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன, மேலும் உள்ளடக்கப்பட்ட வீடுகள் மற்றும் நிறுவனங்களின் எண்ணிக்கை 1,103 ஆகும். சிறுவர் தொழிலாளர்கள் யாரும் கண்டறியப்படவில்லை.

- **வீட்டுத் தங்கல் மற்றும் விருந்தோம்பல் சேவை மையங்கள் உட்பட சுற்றுலாத் துறையை உள்ளடக்கிய விசேட குழு ஆய்வுகளை நடத்துதல்**

2025 ஆம் ஆண்டில், பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகாரப் பிரிவு, வலய தொழில் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட தொழில் அலுவலகங்களால் 75 விசேட குழு ஆய்வுகள் நடத்தப்பட்டது. உள்ளடக்கப்பட்ட வீடுகள் மற்றும் நிறுவனங்களின் எண்ணிக்கை 462. சிறுவர்த் தொழிலாளர்கள் யாரும் கண்டறியப்படவில்லை.

- **சிறுவரை தொழிலாளர்களைப் பயன்படுத்த மாட்டோம் என்று உறுதிமொழிகளைப் பெறுதல்**

தங்கள் நிறுவனங்கள் சிறுவரைத் தொழிலாளர்களைப் பயன்படுத்த மாட்டோம் என்று தொழில் தருநர்களிடமிருந்து உறுதிமொழிகளைப் பெறும் திட்டம் 2024 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 2025 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது. அதன்படி, 2025 ஆம் ஆண்டில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் தருநர்களுக்கு சிறுவர்த் தொழிலாளர் முறையை ஒழிப்பது குறித்த 61 விழிப்பூட்டல் திட்டங்கள் நடத்தப்பட்டு உறுதிமொழிகள் பெறப்பட்டன. மேற்கண்ட காலகட்டத்தில் உறுதிமொழிகளை வழங்கிய தொழில் தருநர்களின் எண்ணிக்கை 679. அதன்படி, 31.12.2025 நிலவரப்படி உறுதிமொழிகளை வழங்கிய மொத்த தொழில் தருநரகளின் எண்ணிக்கை 1,124.

**2.6.8.1 2025 ஆம் ஆண்டில் இலங்கையில் சிறுவர்த் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான தேசிய வழிகாட்டுதல் குழு நடத்திய கூட்டங்கள் பற்றிய தகவல்கள்**.

**அட்டவணை** 2.7 - 2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசிய வழிகாட்டுதல் குழு கூட்டங்கள்

| கூட்டத் தேதி | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் |
|---|---|---|
| 2025.03.11 | 31 | ➢ **2025** ஆம் ஆண்டிற்கான சிறுவர் தொழிலாளர் குறித்த வரைவு செயல் திட்டத்தை சமர்ப்பித்தல் மற்றும் தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்த கவந்துரையாடல்<br>➢ சிறுவர் தொழிலாளர் முறையைத் தடுக்க அடிமட்ட சமூகத்திற்கு கல்வி கற்பிப்பதன் அவசியம் மற்றும் தோட்டங்களில் இருக்கும் வெளிப்புற வளர்ப்பு முறைகளால் எழும் சிறுவர் தொழிலாளர் ஆபத்துகள் குறித்த கலந்துரையாடல். |
| 2025.08.07 | 44 | |

### 2.6.9 ஊடகங்கள் மூலம் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகளை நடத்துதல்

#### 2.6.9.1 விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள்

**அட்டவணை 2.8** - 2025 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள்.

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை | நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை / பயனாளிகளின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டத்தின் முடிவுகள் |
|---|---|---|---|---|
| மீண்டெழுவது | 370,000/- | 367,500/- | 305,096/- | 83 |
| மூலதனம் | 58,000/- | 60,500/- | 42,686/- | 71 |

## 3.7 நி.பி 208 இன் நியதிகளின்படி ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இந்த அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதிசார் ஒதுக்கீட்டு ஏற்பாடுகள்.

**அட்டவணை 3.3 -** நி.பி 208 இன் நியதிகளின்படி ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இந்த அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதிசார் ஒதுக்கீட்டு ஏற்பாடுகள்

| தொ. இல. | ஒதுக்கீடுகள் பெறப்பட்ட அமைச்சுக்கள் / திணைக்களங்கள | ஒதுக்கீட்டின் நோக்கங்கள் | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு | | உண்மையான செலவீனம் | வழங்கப் பட்ட இறுதி ஒதுக்கீட்டின் % ஆகப் பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | மூல ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| அறிக்கையில்லை | | | | | | |

## 3.8 நிதி சாரா ஆதனங்களை அறிக்கையிடுவதில் செயலாற்றுகை

**அட்டவணை 3.4 -** நிதி சாரா ஆதனங்களை அறிக்கையிடுவதில் செயலாற்றுகை "000"

| ஆதனக் குறியீடு | குறியீட்டு விபரம் | பொருட் கணக்கெடுப்பு அறிக்கையின் படி 2025.12.31 இலுள்ளவாறு மீதி | நிதி நிலமை பற்றிய அறி க்கையின் படி 2025.12.31 இலுள்ளவாறு மீதி | எதிர் காலத்தில் கணக்கிடப்ப டும்; | முன்னேற்றம் % இல் அறி க்கையிடப்ப டு தல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடங்களும் கட்டமைப்புக ளும | 31,824/- | 31,824/- | - | 100% |
| 9152 | இயந்திரம | 492,945/- | 492,945/- | - | 100% |
| 9153 | காணிகள் | - | - | - | - |
| 9154 | தொட்டுணரமு டியாத ஆதனங்கள் | - | - | - | - |
| 9155 | உயிரியல் ஆதனங்கள் | - | - | - | - |
| 9160 | நடந்துகொண் டிருக் கின்ற வேலை | - | - | - | - |
| 9180 | குத்தகை ஆதனங்கள் | - | - | - | - |

## 3.9. தலைமை கணக்காய்வாளர் அறிக்கை

பிரதம கணக்கீட்டு அலுவலர்
தொழில் அமைச்சு

**தலைப்பு 193 - தொழில் அமைச்சின் 2025 திசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி கூற்றுகள் மீதான, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் தொகுப்பு அறிக்கை.**

### 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 193 - தொழில் அமைச்சின் 2025 திசம்பர் 31 ஆம் திகதியிலிருந்தவாறான நிதி நிலைமை பற்றிய கூற்று, அன்றைய தினத்துடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய, மேலும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கக் குறிப்புகளைக் கொண்ட 2025 திசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் விதிகளுடன் இணங்கி வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் விதிகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தொழில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக் கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம்ரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தருக்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2026 ஜூன் 05 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் இணங்கி வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் உப பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தைத் தவிர, தொழில் அமைச்சின் 2025 திசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மூலம், அதன் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதிப்பாய்ச்சல்கள் ஆகியன நிதிக் கூற்றுகளுக்கான விளக்கக் குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்று தயாரிப்பு அடிப்படைகளுக்கு இணங்க, அனைத்து முக்கியத்துவமிக்க விடயங்களிலும் ஒரு நியாயமான நிலையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் தகைமைப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் இக்கணக்காய்வை மேற்கொண்டேன். இத்தர தரநியமங்களின் கீழ் எனக்குரிய பொறுப்புகள், இந்த அறிக்கையின் "நிதி கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள்" எனும் பிரிவில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயம்க்கு அடிப்படையை வழங்குவதற்காக நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவை என்றும் பொருத்தமானவை என்றும் நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான அடிப்படையை விவரிக்கும் நிதி அறிக்கைகளுக்கான விளக்கக் குறிப்பு 1 இன் பால் அவதானத்தை ஈர்க்கின்றேன். இந்த நிதிக் கூற்றுக்கள் அரசாங்க நிதிப் பிரமாணங்கள் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசம்பர் 17 ஆம் திகதியிட்ட அரச கணக்குகள் வழிகாட்டி இல. 02/2025 ஆகியவற்றிற்கு இணங்க, தொழில் அமைச்சு, திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் தேவைக்காக தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்குப் பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கை அமைச்சு, திறைசேரி மற்றும் இலங்கை

பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மட்டுமே நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக எனது அபிப்பிராயம் மாற்றம் பெறவில்லை.

### 1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக தலைமை கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பு

அரசாங்க நிதிப் பிரமாணங்கள் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசம்பர் 17 ஆம் திகதியிட்ட அரச கணக்குகள் வழிகாட்டி இல. 02/2025 ஆகியவற்றிற்கு இணங்க, அனைத்து முக்கியத்துவமிக்க விடயங்களிலும் ஒரு நியாயமான நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் நிதி கூற்றுகளைத் தயாரிப்பதும், மோசடிகள் மற்றும் பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய முக்கியத்துவமிக்க தவறான கூற்றுகள் அற்ற நிதி கூற்றுகளைத் தயாரிப்பதற்கு ஏதுவாகத் தேவைப்படும் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பதும் தலைமை கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், அமைச்சு வருடாந்த மற்றும் காலமுறை நிதி கூற்றுகளைத் தயாரிப்பதற்கு ஏதுவாக, தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய முறையான புத்தகங்களையும் பதிவுகளையும் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம், அமைச்சின் நிதித் கட்டுப்பாட்டிற்காக ஒரு பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை வடிவமைக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றது என்பதை தலைமை கணக்கீட்டு அலுவலர் சான்றளிக்க வேண்டும் என்பதுடன், அம்முறைமையின் வினைத்திறன் குறித்து அவ்வப்போது ஆய்வு செய்து, அதற்கேற்ப முறைமையை விளைதிறனாக நடத்துவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

### 1.5 நிதி கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதி அறிக்கைகள், மோசடி அல்லது பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய முக்கியத்துவமிக்க தவறான கூற்றுகளிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பது குறித்து நியாயமான உறுதியைப் பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்பாடு என்பது ஒரு உயர் மட்ட உறுதிப்பாடாகும், ஆனால் இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களின்படி நடத்தப்படும் கணக்காய்வு எப்போதும் முக்கியத்துவமிக்க தவறான கூற்றுகளைக் கண்டறியும் என்பதற்கான உத்தரவாதம் அல்ல. மோசடிகள் மற்றும் பிழைகள் தனித்தனியாகவோ அல்லது கூட்டுக்குழுவாகவோ செல்வாக்கு செலுத்துவதன் காரணமாக முக்கியத்துவமிக்க தவறான கூற்றுகள் ஏற்படலாம் என்பதுடன், அதன் முக்கியத்துவத்தன்மை இந்த நிதி கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு பயனர்களால் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்களின் மீதான தாக்கத்தைப் பொறுத்ததாகும்.
இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களின்படி கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் கணக்காய்வின் போது தொழில்முறைத் தீர்ப்பையும் தொழில்முறைச் சந்தேக மனப்பாங்கையும் பயன்படுத்தினேன். மேலும் என்னால்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வுக் அபிப்பிராய அடிப்படையை வழங்குவதற்காக, மோசடி அல்லது பிழைகள் காரணமாக நிதி அறிக்கைகளில் ஏற்படக்கூடிய முக்கியத்துவமிக்க தவறான கூற்றுகளின் அபாயங்களை அடையாளம் கண்டு மதிப்பிடுவதற்கு, சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டன. பிழையினால் ஏற்படும் முக்கியத்துவமிக்க தவறான கூற்றுகளின் தாக்கத்தை விட, மோசடியினால் ஏற்படும் தாக்கம் மிக வலுவானதாகும். ஏனெனில் அவை இரகசிய கூட்டுச்சதி, ஆவணப் போலி செய்தல், வேண்டுமென்றே தவிர்த்தல், தவறாக சித்தரித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை மீறுதல் போன்ற காரணங்களால் ஏற்படுபவையாகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் வினைத்திறன் குறித்து ஒரு அபிப்பிராயத்தை வெளியிடும் நோக்கில் அல்லாமல், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளக கட்டுப்பாடு குறித்த விளக்கம் பெறப்பட்டது.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றுக்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதி கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மதிப்பிடப்பட்டது.

- நிதி கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றுக்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதும், வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதி கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பிப்பும் மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து தலைமை கணக்கீட்டு அலுவலர்க்குத் தெளிவுபடுத்துகிறேன்.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராங்கள்

### 1.6.1 வருமானமல்லாத வரவுகள்

அமைச்சிடம் இருந்த 5 மோட்டார் வாகனங்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த ரூ. 161,385,000 தொகை, காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல்கள் (உரிமை நீக்க ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்கள் விற்பனை) என்பதன் கீழ் வெளிப்படுத்தப்பட்டு சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சொத்துக்கள் பதிவேட்டிலும் சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக, கணக்காய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள், ஆலை மற்றும் உபகரணங்களின் பெறுமதி அதே தொகையினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.6.2 நிதிச் சொத்துக்கள்

வயது முதிர்ச்சியடையாதவர்கள் வயது முதிர்ச்சியை அடையும் வரை, வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் பொறுப்பின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்புகளாகப் பேணப்பட்டு வரும் 934 கணக்குகளில் ரூ. 233,224,059.31 கணக்காய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் காணப்பட்டதுடன், இந்த மீதிகள் நிதியியல் ரீதியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.6.3 வைப்புக் கணக்கு மீதிகள்

நிதிப் பிரமாணம் 565(4) இன் பிரகாரம் வைப்புக் கணக்கின் ஆரம்ப மீதி தனித்தனியாக முன்னோக்கிக் கொண்டு வரப்பட வேண்டும் என்ற போதிலும், வைப்புக் கணக்கின் ஆரம்ப மீதியான ரூ. 3,992,592 ஒரே மீதியாக முன்னோக்கிக் கொண்டு வரப்பட்டிருந்தது.

### 1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட வேண்டும் என்ற போதிலும், அப்பதிவேடு புதுப்பிக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

## 2. ஏனைய சட்டரீதியான தேவைகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் பிரகடனப்படுத்துகிறேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்தாண்டுடன் ஒத்துப்போகின்றன.

(ஆ) கடந்தாண்டுக்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வுக்கு உட்பட்ட ஆண்டில் தலைப்பு 193 இன் கீழ் 2 திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த விதிகளான ரூ. 428,000,000 இல் ரூ. 80,218,276 அல்லது 18.7 சதவீதம் மீதமாக இருந்தது. திட்டம் 01 இல் 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த விதிகளான ரூ. 2,050,000 தொகையும், திட்டம் 2 இல் 10 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த விதிகளான ரூ. 1,350,000 தொகையும் முழுமையாக மீதமாகியிருந்தது.

### 3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்காதொழுகுதல்

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான குறிப்பு | இணங்காதொழுகுதல் |
|---|---|
| **(அ)** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 104(1) மற்றும் நிதிப் பிரமாணம் 104(3) | நட்டம் அல்லது சேதம் ஏற்பட்ட உடனே அதன் அளவு மற்றும் காரணங்களைத் துல்லியமாக அறிந்துகொள்வதற்கும், அதற்குப் பொறுப்பானவர்களைத் தீர்மானிப்பதற்கும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், நிதிப் பிரமாணம் 104(3) இன் பிரகாரம் முழுமையான அறிக்கையை வழங்குவதற்கு ஏழு நாட்களுக்கு மேல் தாமதமாகும் என எதிர்பார்க்கப்பட்டால், ஒரு ஆரம்ப அறிக்கையை உடனடியாக அனுப்ப வேண்டும் என்ற போதிலும், அமைச்சுக்குச் சொந்தமான வாகனங்கள் சம்பந்தமாக ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பான ஆரம்ப அறிக்கைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| **(ஆ)** 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிட்ட இல. 01/2020 அங்கிய அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2024 ஜூலை 18 ஆம் திகதியிட்ட இல. 07/2024 அங்கிய சுற்றறிக்கை | சுங்கத் தீர்வை இன்றி இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களைக் கொள்வனவு செய்யும் தரப்பினரால் அதற்குரிய வரிகள் செலுத்தப்பட வேண்டும் என அப்புறப்படுத்துதல் அறிவித்தல்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு, அதற்குரிய வரிகளைக் கணக்கிட்டு வசூலித்த பின்னர் அல்லது புதிய கொள்வனவாளருக்குச் செலுத்துமாறு அறிவுறுத்திய பின்னரே விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற போதிலும், அமைச்சிடம் இருந்த 6 வாகனங்களில் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய சுங்க வரித் தொகையான ரூ. 2,626,741 வசூலிக்கப்படாமல் அமைச்சினால் ஏற்கப்பட்டிருந்தது. |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

### 4.1.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை எய்தாமை

(i) சர்வதேச தொழில் அமைப்பின் (ILO) உடன்படிக்கைகள் 190 க்கும் அதிகமாகக் காணப்பட்ட போதிலும், இலங்கையில் அவற்றில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 43 மற்றும் ஒரு நெறிமுறை (Protocol) மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், விவசாயத் துறையில் தொழில் பரிசோதனை, சமூகப் பாதுகாப்பு குறைந்தபட்ச தரநியமங்கள் மற்றும் குறைந்தபட்ச ஊதிய நிர்ணய சர்வதேச தரநியமங்கள் தொடர்பான ILO உடன்படிக்கைகளுக்கு இணங்க அமைய முடியாமல் போயிருந்தது.

(ii) அமைச்சின் பாற்பட்ட பொதுச் சேவைகளைத் திறமையாகவும் பொதுமக்களுக்குப் நட்பான முறையிலும் வழங்குதல் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தின் முறைப்பாடுகளைத் தீர்க்கும் வெளியீட்டு மட்டம் 50 - 74 சதவீத வரையறைக்குள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் அரச, தனியார் துறைகளின் அனைத்து தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதற்குத் தேவையான சாதகமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தொழிற்சங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, தொழிற்சங்கங்களை நடத்துவதற்குத் தேவையான பதிவுப் புதுப்பித்தல்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்படாத சந்தர்ப்பங்களில், பதிவை ரத்து செய்து ஊழியர்களுக்குத் தெளிவுபடுத்தும் ஒரு முறைமை காணப்படவில்லை. திணைக்கள இணையதளத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் பட்டியல் காணப்படுவதுடன், செல்லுபடித்தன்மையைப் பேணுவதற்காக வருடாந்தம் தொழில் ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் முறையாகச் சமர்ப்பிக்கப்பட்டதற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், தொழிற்சங்கங்களின் சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கூடிய வழிமுறைகளுக்கான ஏற்பாடுகள் இச்சட்டத்தில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(iv) தேசிய மனிதவள மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2026 ஆம் ஆண்டாகும் போதும் அதற்குரிய திருத்தங்களை மேற்கொண்டு உரிய பொறுப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**4.2 சொத்து முகாமைத்துவம்**

அமைச்சுக்குச் சொந்தமான இல. KV 7252 அங்கிய மோட்டார் காரின் எஞ்சின் பழுதுபார்ப்பிற்காக 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் மொத்தப் பெறுமதியாக ரூ. 8,095,348 செலவிடப்பட்டிருந்த போதிலும், அது பொருத்தமான ஓட்ட நிலையில் இருந்ததாக வெளிப்படுத்தப்படவில்லை. கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 5 மாதங்களுக்குள் 8,181 கி.மீ. ஓடிய பின்னர், மீண்டும் 2024 ஆம் ஆண்டில் எஞ்சினின் தொழில்நுட்பக் கோளாறு பழுதுபார்ப்புகளுக்காக ரூ. 4,928,750 க்கான மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுக்கு உட்பட்ட ஆண்டில் வாகனம் ஓட்டப் பயன்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், இந்த மோட்டார் கார் தொடர்பாக வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 முகாமைத்துவக் குறைபாடுகள்**

தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் நிறுவப்படவிருந்த "மின்னணு பெறுகை கண்காணிப்பு முறைமை" (EPMS) க்காக, கணக்காய்வுக்கு உட்பட்ட ஆண்டின் பெறுகை திட்டங்களை 2025 செப்டம்பர் 30 ஆம் திகதியளவில் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும், இத்திட்டங்களைத் தயாரித்து வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**5. நல்லாளுகை**

வேலையாளர் நட்டஈட்டு ஆணைக்குழு அலுவலகத்திற்கு, மாவட்ட தொழிற்சாலைகள் பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்களிலிருந்து கிடைக்கப்பெறும் மரண மற்றும் மரணமற்ற விபத்துக்கள் தொடர்பான நட்டஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை விவரங்கள், ஒரு முறையான தரவு முறைமைக்குள் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன், நடப்பிலுள்ள ஆவணங்களும் இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நட்டஈடு கோரும் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது முதல் நட்டஈட்டுத் தொகை வழங்கப்படும் வரை, அது தொடர்பான செயல்பாடுகளைப் பின்தொடர்ந்து கண்காணிப்பதற்கான ஒரு முறையான பொறிமுறை இருக்கவில்லை. காலி மற்றும் பதுளை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட நட்டஈட்டுக் கோரிக்கை பரிசோதனைகளின் போது, 89 சந்தர்ப்பங்களில் வேலையாளர் நட்டஈட்டு ஆணைக்குழு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட மரண மற்றும் மரணமற்ற நட்டஈட்டுக் கோரிக்கை விண்ணப்பங்கள், ஆவணங்களிலோ அல்லது கோப்புகளிலோ பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**6. மனிதவள முகாமைத்துவம்**

(அ) அமைச்சினதும் அதனுடன் இணைந்த நிறுவனங்களினதும் ஊழியர் விபரங்களின்படி, அமைச்சினதும் அதனுடன் இணைந்த நிறுவனங்களினதும் அனுமதிக்கப்பட்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 4,262 ஆக இருந்தபோதிலும், உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 3,322 ஆக இருந்தமையினால் 940 பதவிகள் வெற்றிடங்களாகக் காணப்பட்டன.

(ஆ) ஊழியர் வெற்றிடங்கள், அமைச்சினதும் அதனுடன் இணைந்த நிறுவனங்களினதும் செயலடைவு திறனைப் பாதித்துள்ளதாக அவதானிக்கப்பட்டதுடன், குறிப்பாகத் தொழில் திணைக்களத்தின் இலங்கை நிருவாகச் சேவையின் தரம் III க்கான அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 40 இல், சேவையில் உள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை 16 மாத்திரமே என்பதுடன், 24 பதவிகள் வெற்றிடங்களாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2018 சனவரி 14 ஆம் திகதியிட்ட 02/2018 எண் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் இணைப்பு 01 இன் பிரகாரம், ஒட்டுமொத்த ஊழியர்களுக்காக வருடாந்த செயலாற்றுகை தரங்கணிப்பு உடன்படிக்கைகளில் கையொப்பமிடும் செயல்முறை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஒப்பம்) கே.கே.என். ஜயகொடி**
பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி சார்பாக

## அத்தியாயம் நான்கு

# செயலாற்றுகை குறிகாட்டிகள்

# செயலாற்றுகை குறிகாட்டிகள்

**அட்டவணை 4.1** - அமைச்சின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)

| | குறிப்பிட்ட குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றின் சதவீதமாக (%) உண்மையான விளைவு | | |
|---|---|---|---|---|
| | | 100% -90% | 75% - 89% | 50% - 74% |
| **தொழில் அமைச்சு** | | | | |
| 1 | தொழில் திணைக்களம் தொடர்பான புதிதாக இயற்றப்பட்ட/திருத்தப்பட்ட சட்டங்களின் எண்ணிக்கை | 2 | | 3 |
| 2 | தேசிய தொழிலாளர் அமைப்புக்கு அறிக்கைகள்- | | | |
| | i. அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் அமைப்பு சமவாயங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டு அறிக்கைகளின் எண்ணிக்கை | √ | | |
| | ii. அங்கீகரிக்கப்படாத சமவாயங்களுக்காக அறிக்கைகளின் எண்ணிக்கை | √ | | |
| | iii. விசேட அறிக்கை பரிந்துரைகளின் எண்ணிக்கை(Article 24 / Anti Trafficking / EU GSP+) | √ | | |
| 3 | வேலை உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்தலை ஒழிப்பதற்கான புதிய சமவாயம் - C 190 (பங்குதாரர்களிடையே விழிப்பூட்டலை ஏற்படுத்துவது தொடர்பாக இந்த சமவாய விதிகளைப் பற்றி கலந்துரையாடி செயல்படுத்த ஒரு அமைச்சுகளிடையே குழுவை நிறுவுதல்) | √ | | |
| 4 | பிற சர்வதேச நிறுவனங்கள், அமைச்சுகள் மற்றும் பல்வேறு பங்குதாரர்களுக்காகத் தொகுக்கப்பட வேண்டிய அறிக்கைகளின் எண்ணிக்கை | √ | | |
| | i. Human Trafficking in Persons | √ | | |
| | ii. US Child Report | √ | | |
| | iii. Convention on the Elimination of Discrimination against Women | √ | | |
| 5 | சிறுவர் உழைப்பு முறையை ஒழிப்பது குறித்து நடத்தப்பட்ட தேசிய வழிகாட்டுதல் குழு கூட்டங்களின் எண்ணிக்கை (NSCECL) | √ | | |
| 6 | சிறுவர் உழைப்பு முறையைத் தடுப்பது குறித்து நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை | √ | | |
| 7 | நடைபெற்ற தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழு கூட்டங்களின் எண்ணிக்கை | √ | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | சமூகப் பாதுகாப்பு அனுகூல நன்மைகளுக்கான காப்பீட்டு அடிப்படையிலான திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான முதற்கட்ட கலந்துரையாடல்கள் | √ | | |
| 9 | சர்வதேச தொழிலாளர் மாநாட்டிற்கான அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பது மற்றும் அவர்கள் வெளிநாடு செல்வதற்கான தயாரிப்பு | √ | | |
| 10 | தொடர்புடைய கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன (DWCP (Decent Work Country Program) | √ | | |
| 11 | நடத்தப்பட்ட பணியாளர் கூட்டங்களின் எண்ணிக்கை | √ | | |
| 12 | நடத்தப்பட்ட வருடாந்த செயல் திட்ட முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை | √ | | |
| 13 | நடைபெற்ற நிறுவனத் தலைவர்கள் கூட்டங்களின் எண்ணிக்கை | √ | | |
| 14 | செயலாற்றுகை /முன்னேற்ற அறிக்கைகள் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. | √ | | |
| 15 | வரும் ஆண்டிற்கான செயல் திட்டம், பெறுகை திட்டம், கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | √ | | |
| 16 | பதிலளிக்கப்பட்ட கணக்காய்வு வினவல்களின் எண்ணிக்கை | √ | | |
| 17 | நடத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களின் எண்ணிக்கை | √ | | |
| 18 | முன்மொழியப்பட்ட ஆண்டிற்கான மனிதவள மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. | √ | | |
| 19 | பயிற்சி பெற்ற அதிகாரிகளின் எண்ணிக்கை | √ | | |
| 20 | நிதி மற்றும் கணக்கீட்டு அறிக்கைகள் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன. | √ | | |
| 21 | நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் பொருட்கள் கணக்கெடுப்பை நடத்துதல். | √ | | |
| **தொழில் திணைக்களம்** | | | | |
| 22 | 4 நாட்களுக்குள் அனுப்பப்பட்ட ஊழியர்களின் சேமலாப வைப்பு நிதி அனுகூல நன்மைகளை செலுத்துவதற்கான முடிவு கடிதங்களின் சதவீதம் | | √ | |
| 23 | 2025 ஆம் ஆண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகளில் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையின் சதவீதம் | | | √ |
| 24 | பதிவு செய்ய வேண்டிய இலக்கு எண்ணிக்கையில் பதிவுசெய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | √ | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | சமூக உரையாடலை மேம்படுத்துவதற்காக நிறுவன அளவிலான திட்டங்களை நடத்த இலக்கு எண்ணிக்கையில் இருந்து நடத்தப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கையின் சதவீதம் | √ | | |
| 26 | அதிகாரிகளுக்கு நடத்தப்பட வேண்டிய இலக்கு பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கையில் நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கையின் சதவீதம் | √ | | |
| **மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்** | | | | |
| 27 | வேலை தேடுபவர்களின் பதிவு | √ | | |
| 28 | வேலை வெற்றிடப் பதிவு | √ | | |
| 29 | வேலை தேடுபவர்களின் வேலைவாய்ப்பு | √ | | |
| 30 | பயிற்சிக்காக வேலை தேடுபவர்களை பரிந்துரைத்தல் | | | √ |
| 31 | பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்படும் தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | √ | | |
| 32 | சுயதொழில் மற்றும் முயற்சியாண்மை தொடக்க எண்ணிக்கை | √ | | |
| **தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனம்** | | | | |
| 33 | அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு நடத்தப்படும் டிப்ளமோ கற்கைநெறிகள் மற்றும் பரீட்சைகளின் எண்ணிக்கை | √ | | |
| 34 | அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு நடத்தப்படும் சான்றிதழ் கற்கைநெறிகள் மற்றும் பரீட்சைகள் | √ | | |
| 35 | அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு நடத்தப்படும் அடிப்படை கற்கைநெறிகள் மற்றும் பரீட்சை கள் | | √ | |
| 36 | குறுகிய கால விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | √ | | |
| 37 | தொழில் பாதுகாப்புச் சட்டத்தின் திருத்தம் | | | √ |
| 38 | பதிலளிக்கப்பட்ட தணிக்கை விசாரணைகளின் எண்ணிக்கை | √ | | |
| 39 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் | √ | | |
| 40 | சுற்றுச்சூழல் கணக்கெடுப்பு அளவீட்டு அறிக்கைகளின் எண்ணிக்கை | | √ | |
| 41 | மருத்துவ பரிசோதனை அறிக்கைகளின் எண்ணிக்கை | | | √ |
| 42 | இடர் மதிப்பீட்டு கணக்கெடுப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை | √ | | |
| 43 | கள விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | √ | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 44 | CSR நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | √ | | |
| **தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம்** | | | | |
| 45 | டிப்ளமோ கற்கைநெறிகளின் எண்ணிக்கை | √ | | |
| 46 | சான்றிதழ் கற்கைநெறிகளின் எண்ணிக்கை | √ | | |
| 47 | குறுகிய கால கற்கைநெறிகளின் எண்ணிக்கை (1 நாள்/2 நாட்கள்/3 நாட்கள்) | √ | | |
| 48 | வாடிக்கையாளர் நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில் நடத்தப்படும் கற்கைநெறிகளின் எண்ணிக்கை | √ | | |
| 49 | தடைதாண்டல் பரீட்சைகள், ஆட்சேர்ப்பு பரீட்சைகள், மதிப்பீடுகள் மற்றும் பதவியுயர்வு பரீட்சைகளின் எண்ணிக்கை | √ | | |
| 50 | ஆலோசனை சேவைகள் | | | √ |
| 51 | விசேட ஒரு நாள் பயிற்சி செயலமர்வுகளின் எண்ணிக்கை | | √ | |
| **சிரம வாசனா நிதி** | | | | |
| 52 | விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | √ | | |
| 53 | வழங்கப்படும் அபாயகரமான விபத்து உதவித்தொகைகளின் எண்ணிக்கை | √ | | |
| 54 | வழங்கப்படும் சட்ட உதவிகளின் எண்ணிக்கை | | √ | |
| 55 | வழங்கப்படும் மருத்துவ உதவிகளின் எண்ணிக்கை | | | √ |
| 56 | நடத்தப்படும் மருத்துவ முகாம்களின் எண்ணிக்கை | √ | | |
| **வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்** | | | | |
| 57 | முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | | √ | |
| 58 | 18 வயது நிரம்பிய பிள்ளைகள் காரணமாக விடுவிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | √ | | |

அத்தியாயம் ஐந்து

# நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் செயலாற்றுகை (SDGs)

# நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் செயலாற்றுகை (SDGs)

## 5.1 இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| இலக்கு / குறிக்கோள் | | இலக்குகள் | | அடைவு குறிகாட்டிகள் | | 2025.01.01 முதல் 2025.12.31 வரையிலான அடைவு முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | எல்லா இடங்களிலும் வறுமையை அதன் அனைத்து வடிவங்களிலும் ஒழித்தல் | 1.1 | 2030-க்குள் எல்லா இடங்களிலும் உள்ள அனைத்து மக்களுக்கும் கடும் வறுமையை ஒழிக்க வேண்டும். தற்போதைய மதிப்பீடுகளின்படி, ஒரு நாளைக்கு 1.25 டாலருக்கும் குறைவாக வருமானம் ஈட்டி வாழும் மக்களே கடும் வறுமை என வரையறுக்கப்படுகிறார்கள். | 1.1.1 | பாலினம், வயது, வேலைவாய்ப்பு நிலை மற்றும் புவியியல் இருப்பிடம் (நகர்ப்புறம், கிராமப்புறம்) ஆகியவற்றின் அடிப்படையில் சர்வதேச வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள்தொகையின் விகிதம் | 2025.04.01 முதல் தேசிய குறைந்தபட்ச மாத ஊதியத்தை ரூ. 27,000.00 ஆகவும், நாட்சம்பளத்தை ரூ. 1,080.00 ஆகவும் உயர்த்துவதற்கும், 2026.01.01 முதல் தேசிய குறைந்தபட்ச மாத ஊதியத்தை ரூ. 30,000.00 ஆகவும், நாட்சம்பளத்தை ரூ. 1,200.00 ஆகவும் உயர்த்துவதற்கும் தேசிய குறைந்தபட்ச ஊதியச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. |
| 04 | அனைவருக்கும் விரிவான, சமத்துவமான தரமான கல்வியை உறுதிசெய்தல் மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்கும் வாய்ப்புகளை வழங்குதல் | 4.3 | 2030-ஆம் ஆண்டிற்குள், அனைத்துப் பெண்களும் ஆண்களும் பல்கலைக்கழகக் கல்வி உட்பட, தரமான மற்றும் மலிவு விலையிலான தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் உயர்கல்வியைப் பெறும் வாய்ப்பைப் பெறுவார்கள். | 4.3.1 | கடந்த 12 மாதங்களில் முறையான மற்றும் முறைசாராக் கல்வியில் இளைஞர்கள் மற்றும் பெரியவர்களின் பங்கேற்பு விகிதம், பாலின வாரியாக | சாதாரண தர பரீட்சையில் பங்கேற்கும் மாணவர்களில் 20% பேருக்கு தொழில் வழிகாட்டுதல் வழங்கும் நோக்கத்தில், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் 2,518 பாடசாலைகளில் 75,685 மாணவர்களுக்கு வழிகாட்டுதல் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.<br><br>உயர்தர பரீட்சையில் பங்கேற்கும் மாணவர்களில் 20% பேருக்கு தொழில் வழிகாட்டுதல் வழங்கும் நோக்கத்தில், 1,199 பாடசாலைகளில் 37,900 மாணவர்களுக்கு வழிகாட்டுதல் திட்ட நிகழ்ச்சிகளை செயல்படுத்தப்பட்டுள்ளன. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 05 | பாலின சமத்துவத்தை அடைந்து அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு வலுவூட்டல் | 5.1 | எல்லா இடங்களிலும் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் முடிவுக்குக் கொண்டுவருதல் | 5.1.1. | பாலின சமத்துவம் மற்றும் பாகுபாடின்மையை ஊக்குவிக்கவும் கண்காணிக்கவும் ஒரு சட்டக் கட்டமைப்பு உள்ளதா இல்லையா | • 2019-ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் சர்வதேச தொழிலாளர் அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட “வன்முறை மற்றும் துன்புறுத்தல் உடன்படிக்கை” (C190- வன்முறை மற்றும் துன்புறுத்தல் உடன்படிக்கை)-ஐ ஒப்புறுதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.<br><br>• 2025-ஆம் ஆண்டில் இரவு நேரப் பணிகளில் பெண்களைப் பணியமர்த்துவது தொடர்பாக நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளைப் பரிசீலித்த பின்னர், தொடர்புடைய இரவு நேரப் பணி நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக, தொழில் திணைக்களம் 757 அனுமதிகளை வழங்கியுள்ளது.<br><br>• அதேபோல், இரவு நேரப் பணிகளில் பெண்களைப் பணியமர்த்துவது தொடர்பான சேவை நிபந்தனை மீறல்கள் குறித்து 2025-ஆம் ஆண்டில் 4 முறைப்பாடுகள் பெறப்பட்டன, அவற்றில் 2 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டன. மீதமுள்ள 2 முறைப்பாடுகள் குறித்து |
| | | | | | | |
| | | 5.2 | மனித கடத்தல், பாலியல் மற்றும் ஏனைய வகையான சுரண்டல் உள்ளடங்கலாக, பொது மற்றும் தனியார் துறைகளிலுள்ள அனைத்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் இல்லா தொழித்தல் | 5.2.1 | கடந்த 12 மாதங்களில் நெருங்கிய துணைவரால் உடல், பாலியல் அல்லது உளவியல் ரீதியான வன்முறையை அனுபவித்த 15 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பெண்கள் மற்றும் சிறுமிகளின் எண்ணிக்கை, வன்முறையின் வகை மற்றும் வயது வாரியாக | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 5.6. அ. | அனைத்து மட்டங்களிலும் பாலின சமத்துவம் மற்றும் பெண்கள், சிறுமிகளின் மேம்பாட்டிற்கான நல்ல கொள்கைகளை ஏற்றுக்கொண்டு, வலுப்படுத்தி, சட்டப்பூர்வமாக அமல்படுத்த வேண்டும். | 5.அ.1 | பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தலுக்காக பொது நிதிகளை அங்கீகரித்து ஒதுக்கீடு செய்வதற்கான அமைப்புகளைக் கொண்டுள்ள நாடுகளின் எண்ணிக்கை | விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. |
| 8 | அனைவரையும் உள்ளடக்கிய, நிலைபேறான மற்றும் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி மற்றும் அனைவருக்கும் முழுமையான, உற்பத்தி மற்றும் சீரிய வேலைவாய்ப்பை ஊக்குவித்தல் | 8.5 | 2030 ஆம் ஆண்டளவில் இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைத்து ஆண் களுக்கும், பெண்களுக்கும் ஆக்கத்திறனுள்ள, சீரிய வேலை வாய்ப்புகளை வழங்குதல். | 8.5.1 | தொழில், வயது மற்றும் இயலாமை காரணிகளின் அடிப்படையில் ஆண் மற்றும் பெண் ஊழியர்களின் சராசரி மணிநேர வருமான | தொழில் சட்டங்களின்படி, தனியார் மற்றும் பகுதி-அரச நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் சராசரி மணிநேர வருமானம், வயது, ஊனம் அல்லது பாலினம் போன்ற காரணிகளின் அடிப்படையில் மாறுபடுவதில்லை. |
| | | | | 8.5.2 | பாலினம், வயது மற்றும் குறைபாடுகள் உள்ள நபர்களின் அடிப்படையில் வேலையின்மை விகிதம் | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் , 2025 ஆம் ஆண்டில்,<br>• 64,581 தொழில் வெற்றிடங்களைப் பதிவுசெய்து, 6,310 வேலை தேடுபவர்களுக்குப் தொழில் வழங்கியது.<br>• 1,501 தொழில் முயற்சியாண்மையாளர் மற்றும் சுயதொழில் செய்பவர்களை உருவாக்கியது.<br>• 36,180 வேலை தேடுபவர்களைத் தொழில் வழிகாட்டுதலுக்காகப் பரிந்துரைத்தது. 11,757 வேலை தேடுபவர்கள் பயிற்சிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். |
| | | 8.7 | கட்டாய உழைப்பை ஒழிப்பதற்கும், பெண் அடிமைத்தனம் மற்றும் ஆள் கடத்தலுக்கு முற்றுப்புள்ளி | 8.7.1 | பாலினம் மற்றும் வயது வாரியாக 5-17 வயதுக்குட்பட்ட சிறுவர் | • 2025-ஆம் ஆண்டில், சிறுவர் தொழிலாளர் தொடர்பான 77 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டன. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | வைப்பதற்கும், சிறுவர் படை வீர்ர் உள்ளடங்கலாக சிறுவர் தொழிலின் மோசமான வடிவங்களைத் தடுப்பதற்கும், 2025 ஆம் ஆண்டிற்குள் அனைத்து வகை யான சிறுவர் தொழிலுக்கும் முடிவு கட்டுவதற்கும் உடனடியாக பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்தல் | | தொழிலாளர்களின் எண்ணிக்கை | இவற்றில், 08 முறைப்பாடுகள் சிறுவர் தொழிலாளர் எனக் கண்டறியப்பட்டு, இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br><br>மீன்பிடி மற்றும் தோட்டத் துறைகளில் சிறுவர் தொழிலாளர் அபாயத்தில் உள்ள சிறுவர்களைக் கண்டறிய, இலக்கு வைக்கப்பட்ட அபாயப் பகுதிகளில் 35 சிறப்பு கள ஆய்வுகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. கண்டறியப்பட்ட இல்லங்கள் மற்றும் நிறுவனங்களின் எண்ணிக்கை 1,103 ஆகும். சிறுவர் தொழிலாளர் யாரும் கண்டறியப்படவில்லை என்றாலும், குழந்தை தொழிலாளர் அபாயத்தில் உள்ள 29 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டனர். இது தொடர்பாக தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைக்காக பிரதேச செயலகங்களுக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>• தங்கும் விடுதிகள் மற்றும் விருந்தோம்பல் சேவை மையங்கள் உட்பட சுற்றுலாத் துறையை உள்ளடக்கி 75 சிறப்பு குழு ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. ஆய்வு செய்யப்பட்ட இல்லங்கள் மற்றும் நிறுவனங்களின் எண்ணிக்கை 462 ஆகும். சிறுவர் தொழிலாளர் யாரும் கண்டறியப்படவில்லை.<br><br>சர்வதேச தொழிலாளர் அமைப்பின் நிதியுதவியுடன் 'கட்டாய உழைப்பு' என்ற கருப்பொருளின் அடிப்படையில் பயிற்றுநர்களுக்கான பயிற்சி (TOT) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | திட்ட நிகழ்ச்சியை ஒன்று நடத்தப்பட்டது. இதில் பத்து பொலிஸ் அதிகாரிகள், ஐந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு அதிகாரிகள் மற்றும் பதினைந்து தொழில் திணைக்கள அதிகாரிகள் பங்கேற்றனர். பயிற்சி பெற்ற அதிகாரிகள் வள நபர்களாகப் பயன்படுத்தப்பட்டனர். மேலும், 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் கட்டாய உழைப்பு குறித்த இரண்டு விழிப்பூட்டல் செயலமர்வுகள் நடத்தப்பட்டன. இதன்மூலம், தொழில் திணைக்களம் , இலங்கை பொலிஸ் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த எண்பது அதிகாரிகளுக்கு (முப்பது பொலிஸ் அதிகாரிகள், பத்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் நாற்பது தொழில் திணைக்கள அதிகாரிகள்) பயிற்சி அளிக்கப்பட்டது. |
| | | 8.8 | தொழிலாளர்களின் தொழில் உரிமைகளை நிலைநாட்டுதல், புலம்பெயர்ந்த பெண்கள், புலம்பெயர்ந்தோர் மற்றும் அபாயகரமான வேலைகளில் ஈடுபடுபவர்கள் உள்ளடங்கலாக அனைத்து வேலையாளர்களுக்கும் பாதுகாப்பான மற்றும் காப்பான பணிச்சூழலை ஊக்குவித்தல். தொழிலாளர்களின் தொழில் உரிமைகளை நிலைநாட்டுதல், புலம்பெயர்ந்த பெண்கள், புலம்பெயர்ந்தோர் மற்றும் அபாயகரமான வேலைகளில் ஈடுபடுபவர்கள் உள்ளடங்கலாக | 8.8.1 | பாலினம் மற்றும் குடியேற்ற நிலை அடிப்படையில் பணி தொடர்பான விபத்துகளின் அபாயகரமான மற்றும் அபாயகரமான அல்லாத விகிதங்கள் | • 2025 ஆம் ஆண்டில், வேலைத்தலங்கள் தொடர்பான 46 உயிரிழப்பு விபத்துகளும், 1371 உயிரிழப்பு அல்லாத விபத்துகளும் திணைக்களத்துக்கு தெரிவிக்கப்பட்டன. திணைக்களம் இந்த விபத்துகளை விசாரித்து, உரிய சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், விபத்துகளுக்கான காரணங்களைக் கண்டறிவதன் மூலம் இது போன்ற விபத்துகள் மீண்டும் நிகழாத வகையில் செயல்படுமாறு தொழில்தருநர்க்குகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. அதன்படி, இந்த ஆண்டில் தொழிற்சாலைகள் அவசரச் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | அனைத்து வேலையாளர்களுக்கும் பாதுகாப்பான மற்றும் காப்பான பணிச்சூழலை ஊக்குவித்தல். | 8.8.2 | பாலினம் மற்றும் இடம்பெயர்வு நிலைகள் ஆகியவற்றின் ILO ஆவணங்கள், தேசிய அரசியலமைப்பு அடிப்படையில் தொழிலாளர் உரிமைகளுடன் (சந்திக்கும் சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம் பேசும் சுதந்திரம்) தேசிய இணக்கத்தின் நிலை. | சட்டத்தை மீறிச் செயல்பட்ட மூன்று ஊழியர்கள் மீது திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.<br><br>• நிறுவனத்தில் பேரம் பேசும் சுதந்திரத்தை மேம்படுத்தும் பொருட்டு, ஊழியர்களுக்குத் தொழிற்சங்கங்களை அமைத்து நடத்தவும் , அதற்கேற்பத் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்தவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 2025 ஆம் ஆண்டில் 99 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்தச் சங்கங்களின் எண்ணிக்கையையும் சேர்த்து, 31.12.2025 நிலவரப்படி நாட்டில் உள்ள செல்லுபடியாகும் தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 2,088 ஆகும். |

அத்தியாயம் ஆறு

# மனித வள விபரங்கள்

# மனித வள விவரம்

## 6.1 பதவியணி முகாமைத்துவம்

**அட்டவணை 6.1 -** அமைச்சு மற்றும் அதன் இணை நிறுவனங்கள் தொடர்பான பணியாளர் தகவல்கள்

| | **அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை** | **31.12.2025 நிலவரப்படி பணியாளர்களின் உண்மையான எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் வெற்றிடங்களின் எண்ணிக்கை சதவீதம்** (%) |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 279 | 155 | 124 | 44 |
| உயர் மட்டம் | 700 | 487 | 213 | 30 |
| இரண்டாவது மட்டம் | 2747 | 2263 | 484 | 18 |
| ஆரம்ப மட்டம் | 536 | 417 | 119 | 22 |

**அட்டவணை** 6.2 - அமைச்சு மற்றும் அதன் இணை நிறுவனங்கள் தொடர்பான பணியாளர் தகவல்கள், நிறுவன ரீதியாக

| **தொழில் அமைச்சு** | | | | |
|---|---|---|---|---|
| | **அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை** | **31.12.2025 நிலவரப்படி பணியாளர்களின் உண்மையான எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் வெற்றிடங்களின் எண்ணிக்கை சதவீதம்** (%) |
| சிரேஷ்ட மட்டம் | 18 | 14 | 4 | 22 |
| உயர் மட்டம் | 4 | 3 | 1 | 25 |
| இரண்டாவது மட்டம் | 72 | 45 | 27 | 37 |
| ஆரம்ப மட்டம் | 35 | 23 | 12 | 34 |
| **தொழில் திணைக்களம்** | | | | |
| சிரேஷ்ட மட்டம் | 219 | 122 | 97 | 44 |
| உயர் மட்டம் | 668 | 469 | 199 | 30 |
| இரண்டாவது மட்டம் | 1990 | 1592 | 398 | 20 |
| ஆரம்ப மட்டம் | 467 | 380 | 87 | 19 |
| **மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்** | | | | |
| சிரேஷ்ட மட்டம் | 20 | 10 | 10 | 50 |

| | | | | |
|---|---|---|---|---|
| உயர் மட்டம் | 5 | 1 | 4 | 80 |
| இரண்டாவது மட்டம் | 618 | 583 | 35 | 6 |
| ஆரம்ப மட்டம் | 15 | 12 | 3 | 20 |
| **தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்** | | | | |
| சிரேஷ்ட மட்டம் | 9 | 3 | 6 | 67 |
| உயர் மட்டம் | 13 | 7 | 6 | 46 |
| இரண்டாவது மட்டம் | 18 | 11 | 7 | 39 |
| ஆரம்ப மட்டம் | 5 | 2 | 3 | 60 |
| **தேசிய தொழில்சார் மற்றும் சுகாதார நிறுவகம்** | | | | |
| சிரேஷ்ட மட்டம் | 7 | 2 | 5 | 71 |
| உயர் மட்டம் | 3 | 3 | 0 | - |
| இரண்டாவது மட்டம் | 10 | 6 | 4 | 40 |
| ஆரம்ப மட்டம் | 5 | 5 | 0 | - |
| **சிரம வசனா நிதியம்** | | | | |
| சிரேஷ்ட மட்டம் | 1 | 1 | 0 | - |
| உயர் மட்டம் | 5 | 3 | 2 | 40 |
| இரண்டாவது மட்டம் | 8 | 4 | 4 | 50 |
| ஆரம்ப மட்டம் | 4 | 2 | 2 | 50 |
| **வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்** | | | | |
| சிரேஷ்ட மட்டம் | 5 | 3 | 2 | 40 |
| உயர் மட்டம் | 2 | 1 | 1 | 50 |
| இரண்டாவது மட்டம் | 31 | 22 | 9 | 29 |
| ஆரம்ப மட்டம் | 5 | 5 | 0 | - |

## 6.2 மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது உபரி நிறுவனத்தின் செயல்திறனை பாதித்த விதம்

**அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களில் உள்ள மனித வளப் பற்றாக்குறை பின்வருமாறு**

சிரேஷ்ட மட்டம் 124

உயர் மட்டம் 213

இரண்டாவது மட்டம் 484
ஆரம்ப மட்டம் 119

அரச நிர்வாக சுற்றறிக்கை 14/2022 இன் படி, உள்நாட்டு /வெளிநாட்டு விடுப்பில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கையும் வெற்றிடங்களாகக் கருதப்படும். அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களில் மனித வளப் பற்றாக்குறை காரணமாக, அதிகாரிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக வெற்றிடமாக உள்ள பதவிகளிலும் கடமைகளைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். நிறுவன நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை வினைத்திறனாக, உடனடியாக மற்றும் தொடர்ச்சியாகப் பேணுவதற்கு, குறிப்பாக இரண்டாம் நிலை மட்டத்தில், அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை அலுவர்களின் பற்றாக்குறை ஒரு தடையாக இருப்பது அவதானிக்கப்படுகின்றது

## 6.3. ஊழியர்களின் இயலளவு விருத்தி

### 6.3.1 தொழில் அமைச்சு

**அட்டவணை** 6.3 - உள்நாட்டு பயிற்சி வகுப்புகளில் அமைச்சு அதிகாரிகளின் பங்கேற்பு

| தொடர் இலக்கம் | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர | பயிற்சி பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | நடைபெற்ற திகதி அல்லது காலப்பகுதி | பயிற்சி நாட்களின் எண்ணிக்கை / மாதங்களின் எண்ணிக்கை | மொத்த முதலீடு (ரூ.) | பெற்ற அறிவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | Higher National Diploma in Public Procurement and Contract Administration | 1 | 2025.01.30 | வருடம் 1 | 138,000.00 | பெறுகை செயல்முறை பற்றிய அறிவு |
| 2 | Workshop on "New Guidelines of Procurement Procedure - 2025" | 54 | 2025.01.30 | தினம் 1 | 189,000.00 | |
| 3 | Workshop on "The Seminar on New Procurement Guidelines" | 1 | 2025.03.19 | தினம் 1 | 14,000.00 | |
| 4 | புதிய பெறுகை வழிகாட்டுதல்கள் | 1 | 2025.06.12 | தினம் 1 | 14,000.00 | |
| 5 | பொது பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தில் பட்டயப் படிப்பு - 5வது தொகுதி | 1 | 2025.10.11 | වසර 1 | 80,000.00 | பெறுகை செயல்முறை பற்றிய அறிவு |
| 6 | பெறுகை திட்ட நிகழ்ச்சிகள் | 2 | 2025.12.19 | தினம் 1 | 28,000.00 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | Workshop on “Official Minutes Writing and Letter Writing” | 2 | 2025.02.21 | தினம் 1 | 13,000.00 | கூட்டக் குறிப்புகள் மற்றும் கடிதங்கள் எழுதும் அறிவு |
| 8 | Workshop on “Duties and Responsibilities of Administrative and Officers” | 1 | 2025.02.24 – 2025.02.25 | தினம் 2 | 13,000.00 | நிர்வாக அலுவலர்கள் மற்றும் அவர்களின் கடமைகள் பற்றிய அறிவு |
| 9 | Workshop on “Inquiry on Losses or Damage under FR 104” | 1 | 2025.02.28 | தினம் 1 | 6,500.00 | சேதங்கள் அல்லது இழப்புகளைக் கையாள்வது பற்றிய அறிவு |
| 10 | ஒழுக்காற்று நடைமுறைகள் (சான்றிதழ் படிப்பு) | 1 | 2025.03.06 – 2025.05.22 | தினம் 12 | 25,000.00 | ஒழுக்காற்று நடைமுறைகள் பற்றிய அறிவு |
| 11 | சார்புவாதி அதிகாரிகளின் அறிவை மேம்படுத்துவதற்கான சான்றிதழ் படிப்பு | 1 | 2025.03.18 – 2025.06.03 | தினம் 10 | 25,000.00 | சார்புவாதி அதிகாரி பங்கு பற்றிய அறிவு |
| 12 | Certificate Program on “ICT and Artificial Intelligence (AI)” | 1 | 2025.03.19 – 2025.04.23 | தினம் 5 | 25,000.00 | தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) பயன்பாடு பற்றிய அறிவு |
| 13 | அமைச்சு ஊழியர்களுக்கான செயற்கை நுண்ணறிவு AI தொழில்நுட்பம் குறித்த பயிற்சித் திட்டம் | 1 | 2025.11.14 | தினம் 1 | 9,670.00 | AI பற்றிய அறிவு |
| 14 | Workshop on “Role and Responsibilities of Officer in Charge of Leave” | 2 | 2025.03.20 | தினம் 1 | 13,000.00 | விடுப்பு அதிகாரியின் பங்கு மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவு |
| 15 | The Seminar on “Internal Audit Practices” | 1 | 2025.05.16 | தினம் 1 | 14,000.00 | உள்ளக கணக்காய்வு பற்றிய அறிவு |
| 16 | The Seminar on “Effective Filing System” | 2 | 2025.05.29 | தினம் 1 | 14,000.00 | கோப்பு ஆவணப்படுத்துதல் பற்றிய அறிவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17 | Diploma in Digital Journalism | 1 | 2025.06.11 | මාස 06 | 42,000.00 | டிஜிட்டல் இதழியல் பற்றிய அறிவு |
| 18 | Public Assets Management | 2 | 2025.07.09 | தினம் 1 | 28,000.00 | சொத்து முகாமைத்துவம் பற்றிய அறிவு |
| 19 | வாகனங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கான பயிற்சித் திட்டம் | 4 | 2025.08.01 | தினம் 1 | 10,000.00 | வாகன நிர்வாகம் பற்றிய அறிவு |
| 20 | Master of Laws by Coursework Programme - Faculty of Law - University of Colombo (2025/26) | 1 | 2025.09.17 | தினம் 1 | 275,000.00 | சட்டம் தொடர்பான மேலதிகக் கல்வி |
| 21 | சாரதி பயிற்சித் திட்டம் | 65 | 2025.09.16 – 2025.09.23 | தினம் 2 | 30,162.00 | பாதுகாப்பான வாகனம் ஓட்டுதல் பற்றிய அறிவு |
| 22 | அலுவலகப் பணியாளர் சேவை அதிகாரிகளுக்கான இரண்டு நாள் தங்கும் வசதியுடன் கூடிய பயிற்சித் திட்டம் | 10 | 2025.10.02 – 2025.10.03<br><br>2025.10.30 – 2025.10.31 | தினம் 2 | නොමිලයේ | அலுவலகப் பணியாளர்களின் கடமைகள் பற்றிய அறிவு |
| 23 | அமைச்சு மற்றும் அதன் இணை நிறுவனங்களின் அனைத்துப் பணியாளர்களுக்கான ஊக்கமளிக்கும் திட்டம் | 1 | 2025.10.02 | தினம் 1 | 28,785.00 | நேர்மறை சிந்தனையை வளர்த்தல் |
| 24 | தனிப்பட்ட கோப்பைப் பராமரிப்பது குறித்த இரண்டு நாள் பயிற்சிப் செயலமர்வு | 1 | 2025.11.20 – 2025.11.21 | தினம் 2 | 13,000.00 | தனிப்பட்ட கோப்புகளைப் பராமரிப்பது பற்றிய அறிவு |
| 25 | நிறுவனச் சட்டத் தொகுப்பு மற்றும் நிதி ஒழுங்குமுறைகள் குறித்த இரண்டு நாள் பயிற்சிப் செயலமர்வு | 3 | 2025.12.15 – 2025.12.16 | தினம் 2 | 39,000.00 | நிறுவனச் சட்டம் மற்றும் நிதி ஒழுக்காற்றுகள் பற்றிய அறிவு |

**அட்டவணை 6.4** - வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களில் அமைச்சு அதிகாரிகளின் பங்கேற்பு

| இலக்கம் | திட்டத்தின் பெயர் | பயிற்சி பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கை, | திட்டத்தின் கால அளவு | மொத்த முதலீடு | | பெறப்பட்ட வெளியீடு/தகவல் |
|---|---|---|---|---|---|---|
| | | | | உள்நாடு | வெளிநாடு | |
| 1 | ITEC: Scholarship Scheme -Year 2024 – 2025, Towards Social Protection and Workplace Safety in the Future of Work, India | 1 | 2025.01.20 – 2025.02.07 | | ✓ | To improve knowledge of social protection systems and workplace safety in the future of work |
| 2 | South-South and Triangular Cooperation Workshop to develop a prototype case management system for dispute prevention and resolution bodies, Bangkok, Thailand | 1 | 2025.02.25 - 2025.02.27 | | ✓ | To improve on developing a prototype case management system for dispute prevention and resolution |
| 3 | Australian Awards Scholarships (AAS)-Intake for Academic Year 2025 | 1 | 2025.01.15 – 2025.12.31 | | ✓ | To develop knowledge & demonstrate high-level professional and technical skills relevant to her area of expertise |
| 4 | Invitation to the 2025 Winter Forum on Demographic Transitions, Italy | 1 | 2025.12.02 - 2025.12.04 | | ✓ | To improve knowledge on how aging populations and youth surges impact labor markets, social security sustainability, digital transformation. |

